12968

மகாமகோபாத்தியா
டாகடர். உ. வே. சாமிநா
நூல் நிலையம்,
சென்னை-600090.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்

பூவாளூர்ப்புராணம்.

இஃது,

திரிசிரபுரஞ்சராப்

ம-ா-ா-ஸ்ரீ, ஒண்டிமுத்தையபிள்ளையவர்கள்

குமாரரும்

மணப்பாறைடிப்டிதாசில்தாராபீஸ்

கிளாக்குமாகிய ம-ா-ா-ஸ்ரீ

ஒ-முத்தையபிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி

அஷ்டாவதானம்

பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

கத்தியரூபஞ்செய்யப்பட்டு

சென்னை

இந்துதியலாஜிகல்யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

விகிர்தி௵ சித்திரை௴.

Registered Copy-right.

1890.

உ

சிவமயம்.

ஸ்ரீமத் தண்டபாணிசுவாமிகள்

மாணாக்கரும்

ஊற்றுமலைச்சமஸ்தானவித்துவானுமாகிய

தி-கந்தசாமிப்புலவரவர்கள்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

எழுசீர்க்கழிநெடிலடிவிருத்தம்.

விளைமலர் பொதுளு மிருதடங் கரைவாய்
வீறறு வீற்றுக வந்திரை தோ
றலை விரி குரண்டமாதிய வற்றை
நந்தின மணிகளை வரன்றித்
திரையெறு நெடிய கரங்களால் வீசித்
திக்கென வெரீஇயெழ வோட்டிப்
புரையிலசாந்தவரைப் புரப்பவர்க்கடுக்கும்
புண்ணியப் பொன்னி நன் னதிசூழ் (க)

வளஞ்செறி சோழ மண்டலந் தனிலெம்
மறைமுத லுறைதலங் களுக்கு
ளுளஞ் செறியளியா துதியுறுப் பூவா
ளூரெனுந் தலபுரா ணத்தைத்
தளஞ்செறி பழனத் திரிசிர புரம் வாழ்
சராப்பு நல் லொண்டி முத்தநிபன்
குளஞ் செறி வசனன் றவத்தில் வந்துதித்த
கோதிலா விதரண நிபுணன் (உ)

உத்தமப் பொறைநன் னீதிநூ லொழுக்க
முயர் சிவ நேசமிக் கிசைந்தோன
சத்தமைப் புயல்போ லருளமுத் தைய
தன பதி தனது மித்திரனு
நத்து விற்பன னெனு சற்குரு நெல்லை
நகர் முனிக கடிமைபூண டவன்பொன
முத்தமிழ்க காஞ்சி நாகலிங கேசதான்
மூலமாய் விரும்பிய வண்ணம். (௮

வேண்டு நர்க் குதவுஞ் சுகுண நிக்ஷேபம
விமல ஞரடி மலர்க் கனபு
பூண்டசுத தாதஷு விதசிகா மணியற்
புதவிலக் கியக்கடல் புகழ்தோய்
தாண்டருங கவிதைச சரபமட்டாவ
தானநற் பொககிஷ மியாருந்
தூண்டருங கமைசோ பூவைகல் யாண
சுந்தர மதுரநா வல்லோன் (௯)

சுவைமுதிா பலவின் கனிகளைக் கீறிச
சுளைகளை யெடுத்துடன பிதிாதருச
செவ்வையுறு நறுஞ்செந் தேனிடைத் தோய்த்தருச
சீனியிற் புரட்டிவைத தாஙகு
நவையுறு கவிதை களின் பொருள் வழாது
நன்குணர்ந் தெடுத்தெடுத் தான்றோர்
குவையு மேனையரும் வியந்துளங் களிப்பக்
[illegible] (௰)

அறுசீர்க்கழிநெடிலவிருத்தம்.

அந்தமலி மதுரிதநன்னய மிருந்து வசன நடை
யாயியற்றச

சிந்தைகுந்து குவிதது முனைவ கூறியமுத தைய புகழ்ச
சீமான் மாதா

சுந்தர மொத திலகுகுட வளைகண மணித திரள் கொழிக்கும்
கடலசூழ் சென்னை

யிந்தியா லாஜிகலயந கிரசாலை தனனிலசசிட்
டிசை பெற்றனே (௬)

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

உ

கணபதிதுணை.

சருக்க அட்டவணை

இலக்கம்	நூலினுட்பிரிவு.	பக்கம்
க	கடவுள்வாழ்த்து .	க
உ	நைமிசச்சருக்கம் ..	ரு
ங	தலவிசேடச்சருக்கம் . ..	க0
ச	தீர்த்தவிசேடச்சருக்கம் .	கச
ரு	மூர்த்திவிசேடச்சருக்கம் .	கஎ
சா	வேள்விச்சருக்கம் .	உச
எ	பிரமன்வரவுச்சருக்கம் . ..	உஅ
அ	ஞானவுபதேசச்சருக்கம் .	ஙஉ
கூ	இந்திரனருச்சனைச்சருக்கம் .	சசா
க0	இரதியருச்சனைச்சருக்கம் ..	சாசா
கக	மன்மதனவழிபடுசருக்கம் ..	அசா
கஉ	அக்கினிசாபநீர்த்தசருக்கம் ..	கூரு
கங	கயாபற்குனிச்சருக்கம்	ககஉ
கச	மஞ்சுளனமகப்பெறுசருக்கம் .	ககசா
கரு	சந்திரசூடனவழிபடுசருக்கம் .	கஉக
கசா	மகட்பேசுசருக்கம் ...	கஉஅ
கஎ	சிவபூசைச்சருக்கம்	கஙஎ
கஅ	கல்யாணச்சருக்கம் ..	கசக

சுப்பிரமணியக்கடவுள்
வரப்பிரசாதியாய்த திருவண்ணாமலையில்
எழுந்தருளியிருந்த
அருணகிரிநாதசுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

திருப்பூவாளூர்த் திருப்புகழ்.

தானதாததன தானதானன—தனதான.

காலன்வேற்கணை யீர்வாளாலமு
நோகொணுகொலை சூழ்மாபாவிகள்
காமசாத்திர வாய்பாடேணிக — ளெவரோடுங்
காதலாகும்வி னவாய்கூறிகள்
மோகபாத்திர மாமூதேவிகள்
காசுகேட்டிட நாணுவேசிக — ணகைகூரு
மாலைமூட்டிகள் மாயாரூபிக
ளானைபோறபொரு நேரேபூண்முலை
மாறுகாட்டிக ணுறுபேதக — மிடுமோயை
மாபராகருக ளோடேகரீடிகள்
போதுபோகருத லாமோநீயெனை
வாவெனப்பரி வாயேயாளவது — மொருநாளோ
பாலருததிரு வாயாலோதிய
வேடநீகெயெதிர போயேவாதுசெய
பாடலதோறறிடு நாலாராயிர — மமண்மூடா
பாரினமேறகழு மீதேயேறிட
நீறிடாததமிழ் நாடடேறிட
பாதுகாததரு ளாலேகூனிமி — ரிறையோனும
ஞாலமேததிய தோர்மாதேவியு
மாலவாயப்பதி வாழ்வாய்வீறுள
ஞானபாகிய பாலாவேலவ — மயில்வீரா
காதகாததிகை சேயேகாவிரி
யாறுதேகிய கால்வாயாம்வள
காடுபோற்றிய பூவாளூருறை — பெருமானே.



உ

சிவமயம

திருசசிறறமபலம.

பூவாளூர்ப்புராணம்.

விநாயகர்காப்பு.

திருமாலும்பிரமனுமற்றமரருநதாமலாவேதசசிரத்தெஞ்ஞான்று, மொருவாதபிரணவததினுரியபொருளொருதானெனறுலகநதேற, மருவாருமலாககொனறைமனனவனபபிரணவமாலகளிறாயததநத, பெருவாழ்வுதருங்களிற்றுககிடமாகுமெனதுளளப்பிறஙகனமாதோ.

கடவுள்வாழ்த்து.

பரசிவம்.

செமபொன்னைவளர்தழலிறசெறிததுககைதீாததெடுககுஞசெல்வாபோல, வம்பொனசெயமணிமவுலியரிககுமலாததவிசிருககைகயற்குமேனைப், பைம்பொனசெயுலகினாககுமபாரினாககும்பலவுயிாககுமபவஙகளைலகித, தமபொன்செய்பதமருளுநதனிமுதலவனொவரவனைசசாாநதுவாழவாம்.

பராபரை.

மணியொளியுமலாமணமும்வயங்கிரவிக்கதிருமதிககலையும் போலத, துணிவருளுஞ்சிவபெருமானுடன்பிரியாததனதியல்பைத் தொல்லையான்மாப், பிணியொருவவெடுத்தருளுந்திருமேனியிடத்துமிகப்பிறங்கக்காட்டி, யணிவிரவிவீற்றிருக்கும் பராபரையையெஞ்ஞான்றுமகத்துள்வைப்பாம்.

திருமூலநாதர்.

பொனபூததமணிமார்பன்வளியழலுங்கணையாகப்புவிதேராக, மின்பூததவிருசுடருமுருளாக வெளிவழியா விரைநது கஙகை, கொன்பூத்தசடைததுளும்பப்பகைகடந்தெண்வடிவுமொருகோலமெய்யின், றென்பூத்தவுறுப்பாகருந்திருமூலநாதர்பதஞ்சேர்ந்துவாழ்வாம்.

குங்குமசவுந்தரி.

வேறு.

நஙகழலடுத்தவாகணன்மையிதுபோலத்
தஙகுவர்களென்றுழைதரிததவரொடொப்பப்
பைங்கிளியையங்கைகொடுபெண்ணுமையயிற்றுங்
குஙகுமசவுநதரிதன்கோலநினைவாமால்.

வெள்ளைவாரணப்பிள்ளையார்.

அள்ளிலையஞாஙகர்மமுழுவாதிகளிருந்து
மொள்ளுகிர்கணுதியினுருப்பகைகடந்த
வளளலெனவேயொருமருப்பினிகல்வென்ற
வெள்ளைமதவாரணமென்மெயவினைமுடிக்கும்.

முருகக்கடவுள்.

உயர்ந்தவருமல்லவருமோங்கிய தன்னைக்காற்
பயந்தழுவினைப்பனொனல்பானையறிவித்தாங்
கியைந்தமகவான்களொடேனல்வளாமாதும்
புயந்தழுவநின்றபுனிதற்கடிமைசெய்வாம்.

திருநந்திதேவர்.

தத்தமக்கிறைவராய்ந்துதகச்செயுமுறையுந்தென்பா
லுத்தமன்முறையுமும்பராதியோர்க்குரூதுநீங்கக
கைத்தலப்பிரம்பினைச்சிக்கண்ணுதல்சேவையார்க்கும்
பத்தியினருளுநந்திபனிமலர்ப்பாதம்போற்றி.

தண்டீசநாயனர்.

அநதிமதிமுடிக்கணிநதவழகர்திருவடிபிழைத்தார்யாரேயாக
வெந்திறலினவருயிரைவீட்டுவதேமேலானவிமலானந்த
தந்தருளுமுததியெனத்தாரணியோரறிந்துய்யத்தந்தைதாள்கள
சிந்தவெறிந்தவர்மலாத்தாளசிந்தனைசெய்தவர்மலமுஞ்சிந்து
மன்றே.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

மட்டவிரிநறுந்துளபமாலாலுமயனாலுமறையினாலும், சுட்டி
யறியாதபெருஞ் சுகப்பொருளை யொருவிரலாற் சுட்டிககாட்டி,
மொட்டிளமென் முலையுமையாள்கொடுப்பவருந்தியவமிழ்தமு
முதுமாஙகே, கொட்டியதுபோறகவினைகொழிததகவுணியா
மணிதனைகுலததாளபோற்றி.

திருநாவுக்கரசுநாயனார்.

கருங்கடலிற்றமையழுந்தப்பெருஞ்சிலையினுறப்பிணித்துக் கண்ணோடாமை, யொருங்குறுத்தசமணர்குழாந்துயர்க்கடலி னொருங்கழுந்தவுமிழ்பைந்தேற, னெருங்கிதழ்ப்பொற்கொன் றையும்வெண்டும்பையும்பாம்பறுகுமுடிநிலவை வைத்தார், தருங்க ருணைக்கடன்முழுகிக்கருங்கடலின் மிதந்தவரைச் சரணஞ்சார் வாம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

நீடியதண்கயிலாயத்தாடியிற்றனிமலவுருநிழற்றவாங்கே, கூ டிவரும்பெருங்கிழமைகுறித்துமறுபிறப்பிட்டதுங்குழகன்முன் னின், றாடியபெண்டைத்துணிதீர்த்துழித்தருசோழமையருள வுவப்பாற்பெற்றுப், பாடியெனையாண்டமுனைப்பாடிவளநாட னையேபாடிவாழ்வாம்.

திருவாதவூரடிகள்.

வடநிழலிலொருநால்வர்க்கருளுநிலையிதுவென்றுவயக்கிப்பா ங்கு, விடமிடற்றிலணிந்தபிரான்குருந்தடியிலிருந்துணர்த்தவி ழைந்துகேட்டோர்,தொடருநிலையிதுவென்றுசெரித்ததுபோற் கரைந்துருகிச்சொரிந்துகண்ணீர்,படாருண்மெய்ம்மொழிதொ டுத்தமாணிக்கவாசகர்பொற்பாதம்போற்றி

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

நூல்

நைமிசசருக்கம்

அகண்ட சச்சிதானந்த கனீபூதனாகிய சிவபெருமானது கடைக்கணிப்பால் அசுத்தமாயாகாரியமாகிய பிரபஞ்சமுழுவதினையுஞ்சிருட்டிக்கும் ஆற்றலையுடைய பிரமனானவர் பூர்வகாலத்தொருநாள் சுசீலர்களாகிய தேவர்களெல்லாந் தன்னைச்சூழ வாசனைமல்கிய வோர் சிங்காசனத்தின் மீதெழுந்தருளியிருக்கையில் அக்காலத்தவ்விடத்தில் வாலகில்லியர் முதலியசில முனீந்திரர்கள் வந்தடுத்துச் சாஷ்டாங்கநமஸ்காரஞ் செய்தெழுந்து நின்று பலவாறுதோத்தரித்துச் சொல்லுவாராயினார். தாமரைமலரின்கண்ணே தங்கியிருக்குந்தாதாவே தேவரீரது சரணங்களையே சரணமென்றடுத்தனம் அதிகதுன்பத்தினைச் செய்யுங் கலியுகத்திலேயுஞ் சற்றுமஞ்சாது அரியதவத்தினைச் செய்திட வோரிடங்காட்டியருளுவீரென்றனர். அருந்தவத்தினருரைத்ததை யம்புயன்கேட்டுத் தன் திருதயகமலத்தின் கண்ணே அனாதிமுத்தனாகிய பரசிவத்தினைத்தியானித்துத் தெளிந்துதெரிவிப்பாராயினார். ஐம்புலனைவென்றஅறவோரே! வருத்தன சற்றுமின்றி நீவிரமகத்தாகிய சிவபுண்ணியங்களை விளைவிப்பதற்கேதுவாகிய தவத்தினைச்செய்தற்குரிய வழகியதலமொன்று காட்டுதும் தெரிந்துகொள்ளுங்களென்றியம்பிச் சிறந்த தனது மனத்திறசாவலோகசரண்யனாகிய சங்கரனைச்சிந்தித்துக் குற்றமற்ற வொருசக்கரத்தினைப்படைத்துச் சொல்லுவார் மாதவத்தீர்! இதோ நாம்விடுகிறவிச்சக்கரமானதுருண்டோடி நிற்கின்றதலத்தினையே தவத்தினுக்குத் தக்கதாகத்தழுவவேண்டுமெனவிடுத்தனர் இங்ஙனமிரணயகருப்பன்விட்ட சக்கரமானது உருட விசை யுடசென்றுதிரிந்திய முதநாகளாலே சேவியமானவ

ளும் நாராயணமூர்த்தியின் திருக்கரத்தில் விளங்குஞ் சுதரிசன த்தைப்போலப்பத்துத்திக்கினு மொளியைப் பரப்பிககொண் டோடி யினிமையான தேனடைக ளூஞ்சலாடப்பூங்கொத்துக் கள் புட்பிக்கப் பசியசாகைகளோடுங்கூடிய சோலைகள்சூழ்ந்த வொருவனத்தில் வந்துநின்றது, பின்னர்முனிவர்கள் வாசனை யானது வீசப்பெற்ற தாமரைத்தவிசிலிருக்குந் தமனியக்கடவு ளையுருகிய வன்போடுபணிந்து விடைபெற்று அதிசீககிரமாகச் சக்கரத்தினைத் தொடர்ந்து அந்நேமிதங்கிய ஆரண்யமாகிய நைமிசாரண்ணியத்தில் தாங்களும்வந்து தங்கினர். அவ்வன மதிகவழகா விருக்கக்கண்ணுற் றுனந்தங்கொண் டவ்விடத்தி லேயே யயனருளியபடி யருந்தவமியற்றுவாராயினர்.

அந்நைமிசாரண்ணியத்தில் வாழுஞ்சிங்கங்களின்குட்டிக ள்தங்குங குகைகளில் யானைகள் தங்கள் குட்டிகளைப்பெற்று வளர்த்துவருவன. கூர்மைபொருந்திய நகங்களையுடைய புலி க்கூட்டங்களின் மத்தியில் பசுக்கள்தங்கள் கன்றுகளை யீன்று வாழ்வன. கீரிப்பிள்ளைகள்வாழுஞ் சோலைகளில் சருப்பங்கள் குடிகொள்வன. ஒந்தியோடுமெயில்களடுத்துமகிழ்வன. இந்தப் பிரகாரமாகப்பட்சிகளும் மிருகங்களுந் தங்களுக்குள் பகைமை பாராட்டாது பலவிடங்கள்தோறுங் கூடிக்குலாவிவாழ்வன. பகைமை, ஒல்லாமை, வேற்றுமை, முதலியவின்மையா யோ ரோதன்மையைவாய்ந்த நைமிசாரண்ய மானது முகையவிழ்ந்த கடுக்கை மாலையினையுடைய கண்ணுதற்பிரான் முத்தியினையே யொத்திருந்தது. அவண்வாழுமிருகங்களும பறவைகளுந்தங்க ட்காகாரம் வேண்டில் இயற்கையாயிறந்தவைகளின் ஊனைய ருந்தவதல்லது ஒன்றனுயிரைக்கொன்று துன்பமுறவுண்ணு வதில்லை. மும்மதங்களைப்பொழியாநின்ற யானைகளானவை காறறுவீசுதலினல் மரங்களினின் றுதிருமிலை முதலியவற்றை

யுண்ணுவதல்லது விருட்சங்களின் கிளைமுதலியவற்றைமுரித்தருந்துகிறதில்லை. அவ்விடத்தில் துன்பத்திற்குக்கேதுவாகிய பிறப்பினையொழிக்கும் பிரகாசம் பொருந்திய சலம்நிறைந்த தீர்த்தங்களுந் தரித்திரங்களைத்தவிர்க்கும்இரத்தினங்களும், வண்டுகள் ரீங்காரஞ்செய்துகொண்டு மதுவுண்ணுங் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, முதலியவைகளு நிறையப்பெற்றன.

இங்ஙனங், கண்டோர்மனங்களைக் கவருங் கவினைவாய்ந்தநைமிசாரண்ணியத்தில் மற்றொருகாலத்தில் சவுனகாதிமகரிஷிகளொருங்கு சேர்ந்து இருக்கு வேதத்திலிருக்குமெங்கள் பெருமானது திருவடிகளைத் தியானித்து ஒரு வேள்வியைவளர்க்கவாரம்பித்தனர். அக்காலத்தில் அவ்விடத்தில் பலமுனிவர்கள் புடைசூழ, மண்ணுலகத்தும் விண்ணுலகத்தும், மற்றுலகத்துமுள்ளார் போகமுதிர்ந்து முத்தியடைவதற்கேதுவாகிய பதினெண்புராணங்களைத் திருவாய்மலர்ந்தருளிய சூதமாமுனிவர் எழுந்தருளினர். அவரைக்கண்டமுனிவர்களுடனேயெழுந்தெதிர்கொண்டு வணங்கிச் *சோடச வுபசாரங்கள் புரிந்து தக்கவாதனத்தின்மீ தெழுந்தருளச்செய்து அகமகிழ்ந்துமனங் கசிந்து சர்வ மங்களகரமான சிவமான்மியங்களைக்கேட்கு மனமுடையராய் விளம்புவாராயினர். எங்கள் முனிரத்தினமே! பூர்வத்தில், சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், பிரமாண்டமென்னுஞ் சாத்துவிகபுராணங்களையும்; நாரதீயம், பாகவதம், காருடம், வைணவமென்னுந் தாமசபுராணங்களையும்; பிராமம்,

---

*சோடசவுபசாரமாவன-தவிசளித்தல், கைகழுநீர்தரல், காலகழுநீர்தரல், முகக்குடிநீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரிநூற்றரல், தேய்வைபூசல், மலர்சாத்தல், நறும்புகைகாட்டல், விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைகாயதரல், மாதிரமலராலருச்சித்தல், மஞ்சலரிசிதூவல்.

பதுமம், பிரமகைவர்த்தம், ஆக்கினேயமென்னு மிராஜசபுரா ணங்களையு முறையே திருவாய்மலர்ந்தருளி அவற்றுளொன்ரு குஞ் சிவபுராணத்தின் உருத்திரசங்கிதையில் க்ஷேத்திரகாண டத்திலுள்ளமூர்த்திகளின் பெருமையினையும், தீர்த்தங்களின் மாட்சிமையினையும், தலங்களின் தகைமையினையும், ஆசிரமம், வருணம், ஒழுக்க முதலியவற்றினையுந் தேவீரது திருமுக மாகிய தாமரையினின்றும் வண்டுகளாகிய நாங்கள் தேனுகிய அசசிவசரிதங்களையுண்டு சிவானந்தத்தால் தேக்குற்றனம், அக் காலத்தில் தேவீர் காவிரிநாட்டினுக்குக் கண்ணுயிலங்கு புற வினுக்கு நல்லருள்புரிந்த பூவாளூர் புண்ணியச் சரிதையைத் தொகுத்துக்கூறினீர். இப்போதத்தனைவிரிவாக வகுத்துக்கூறல வேண்டுமென விரும்பினம், சிவபாரம்யச செல்வராகிய நீவிர் அதில் வறுமையுற்ற வெங்கட்குதவிபுரிதல வேண்டு வது தகுதியன்றே? ஆதலாலற்மாதிகளவளரும் பூவாளூராக காதையினை யருளிசசெய்யவேண்டு மென்றனர். இவற்றி னைக்கேட்ட பௌராணிகராகிய சூதமுனிவர் களிகூர்ந்து பூவாளூர்ப் புண்ணியனைத் தியானித்துத் தனதாசாரியராகிய வாதராயணரின் பாதங்களைச்சிந்தித்து வினைக்கு விடைகொடு த்து விளங்கு மாதவங்களையுடைய மாதவர்கள் முகங்களை நோக்கி யமுதமன்னவாசகத்தால்விளம்புவாராயினர். முனிவீர்! சித்தசங்கரமாகிய பூவாளூரிலெழுந்தருளிய திருமூலநாதரின் பெருமைகளை யாராலியம்பிடக்கூடும். அவரதுசரிதங்களுமவ வாறே யொருவராலு முரைக்க முடியாது. ஆயினு முன்னாத தாமிரபரணிதீர்த்திலுற்ற பொதியமலையி லெழுந்தருளியிருக குஞ் செந்தமிழாசிரியராகிய அகத்தியமுனிவர்பால கேட்ட உபகுமுனிவர் சயிமினிக்குச்சொற்றபடி யானுங்கட்குப் பூவா ளூர்த்தலத்தின பெருமையினையும, திருமூலமூர்த்தியின மகி

மையினையும், பற்குனிதீர்த்தத்தின் சிறப்பினையும், முனிவர்க ளெழுபதுபெயர் மெய்ஞ்ஞானமடையவிரும்பி வேள்விசெய்த விதத்தினையும், அவ்வேள்வியில் பிரமனெழுந்தருளி பொழுக்க மோடு சிவபெருமானைப் பூசைசெய்த விதத்தினையும், வேள்வி யாற்றிய முனிவர்பாலிரங்கி முண்டகச்செல்வன் மெய்ஞ்ஞான வுண்மையினை வுபதேசித்த விதத்தினையும், சிவனென்னுமு னிவர் தனக்கு அச்சுவினிதேவரியற்றிய நன்றியின்பொருட்டு அவர்கட்கு வேள்விப்பாகங்கொடுக்க அதனை யிந்திரன்தடுத்துச் சாபமேற்றுச் சிவபூசைசெய்த விதத்தினையும், சுந்தரமென்னு மரசன் ஒருமானைக்கொல்ல வதனாலொருமுனிவரது சாபமே ற்று மன்மதனாகப்பிறந்து கண்ணுதற்பெருமான் கண்களாலு ருவமழிய அதனால் நாரதர் கட்டளைப்படி இரதிதேவி சிவபூசை புரிந்தவிதத்தினையும், பின்னர் மன்மதனுருவம்பெற்றுப் பிற ைசூடியபெருமானை வந்தனைபுரிந்த விதத்தினையும், அக்கினிபக வான் சங்கரியால் சாபமேற்று விடைக்கொடியோன் வீரியத் தையுண்டு கங்கையினிற்கழித்துத் தனது புறவு உருவத்தை யொழித்துக்கொண்ட விதத்தினையும், மாதவ னொருவன்பொ ருட்டு வடக்கிலுள்ள கயாக்ஷேத்திரத்தின் பெருமை பூவாளூரி லுண்டாகவும் இப்பூவாளூரி லுற்பவித்த நதியினாற்பிதிரர்கள் காலகாலன் கருணையினால் வானேறும் விதத்தினையும், நந்தன வனத்தில் நமபார்வதியா லுண்டாகிய சந்திரவதியானவள் பூக்கொய்கையில் மணிகூடன்பால் மோகங்கொண்டு மஞ்சுள னென்னு மரசனுக்குப்புத்திரியான விதத்தினையும், சந்திரவதி யின்பொருட்டு மணிகூடன் சந்திரகூடனென்ன விருத்தாசலத்தி ற்பிறந்து திரவியஞ்சேகரிக்கத் தீர்த்தயாத்திரைசென்று பூவா ளூரர்ப் புண்ணியனைப் பூசித்துத்திரும்பிய விதத்தினையும், தன னைவழிபாடாற்றிய சந்திரகூடனும், அழகிற்சிறந்த சந்திரவதி

யாகிய குமுதையும் வருத்தமடைய வவர்கள்பொருட்டு மஞ்சுளன்பால் சித்தராய்ச்சென்று பெண்பேசிய விதத்தினையும், சித்தராய்வந்த சிவபெருமான் புன்னைவிருட் சத்தின்கீழெழுந்தருள அவரை மஞ்சுளன்பூசித்த விதத்தினையும், கூவிளவனத்து நாதர் சந்திரசூடற்குங் குமுதைக்குங் கல்யாணமுடித்த விதத்தினையும், உங்கட்குமுறையே சாற்றுதுங் கேண்மினெனப் பௌராணிகர் சொல்லத்தொடங்கினர்.

நைமிசச்சருக்கமுற்றிற்று.

தலவிசேடச்சருக்கம்.

பூவாளூரென்னும் பதியானது திருமகளுக்குச் செல்வத்தினையருளியும், திறல்மகளுக்கு வலியினையளித்தும், தெய்வக்கலைமகளுக்குக் கல்விவழங்கியும் வருவது. அங்கு பொலிந்த வழுக்கு நிலம்வாய்ந்த வழகிய சலநிறைந்த வயல்கள்தோறும் பொன்னையொத்த மகரந்தப்பொடிகளைப் புட்பச்செடிகள் உதிர்த்துக்கொண்டேயிருக்கும். அன்னங்கள் நிலைபெற்றுநின்றுவிளையாடுந் தடங்கள்தோறும் அவ்வன்னத்தினையொத்த மாதர்கள் ஸ்நானஞ்செய்து களிப்பார்கள். அங்குள்ள நந்தனவனங்கள் அங்குள்ள விடங்கட்கு வாசனையை விளைவிப்பதுடன் கண்டோர் கண்க ளிமைகொட்டாது நோக்கும்படி யதிகமாக மலர்களைச் சிந்திப்பெருமழகினை விளைவிப்பன. குளிர்ச்சியினையும், கூர்ந்தசுவையினையுங் கொடுத்து மிக்ககளிப்பினைச் செய்யத்தக்கதென்று வயல்களையும், ஆறுகளையும், தடாகங்களையும் தித்திப்பான நீர்த்துளிகளைச்சிந்தும் பொழில்கள் சூழ்ந்தகலாது நிற்பன. பிராமணர் மாளிகைகள் தட்சனுக்கினியம,

12968

காருகபத்தியம், ஆகவனீயம் என்னும நித்தியவேள்விகளால் வெம்மையுடையதாயினு மத்தீயைததனுள்ளே தழுவிக்கொண்டு இப்பிரபஞ்ச முற்றுமுய்யும்படி மழைவளங்களைச் செய்துகொண்டிருக்கும்; இரத்தினங்களா லிழைத்துக் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் அதிக வுன்னதமாக விருத்தலால் அவற்றுளழகாக வமைக்கப்பெற்ற சாளரங்களின்வழியே விளங்காற்றினைப் பெற்றுககொள்ளும். சேகரிக்கத்தகுந்த பொருள்கள் எத்தனைகோடியாயினுந் தாபித்துவைக்க மத்தியில் இடங்கொடுத்துக்கொண்டு ஆகாயமுழுவதினையுமளாவியநீண்டகொடிகளால் கடைவீதிகளழகைச் செய்துகொண்டிருக்கும். நிறத்தினைவாய்ந்த மணற்கேணிகளில் மொள்ளுந்தோறும் சலஞ்சுரத்தல்போல அவ்வூர்ச்செல்வர்கள் மனைகளில் குவித்து வைத்திருக்கும் நிதியானது கொடுக்குந்தோறுங் குறையாதபடி திருமகளிருந்து வாழ்வள். பிராமணர்களால் மகமும், க்ஷத்திரியாகளால் செயமும், வைசியர்களால் செல்வமும், மற்றையர்களால் தருமங்களும் பிரகாசித்துக்கொண்டிருப்பன. நல்ல வொழுக்கங்கட்கெல்லாமோரிருப்பிடமாய், இழுக்கென்பது சற்றுமவ்விடத்து இல்லையாய், முழுவின்பங்களையும் ஆசைகளையும் கொடுப்பதற்கிடமாய் விளங்குவது.

விசாலம்பொருந்திய இடங்களைவாய்ந்த வீடுகளின் உப்பரிகைகளானவை யோங்கி யாகாயத்தினது முகட்டினைமுட்டி நெருங்கியிருத்தலினால் சூரியனானவன் அவற்றின் மூலமாய்ச் செல்லுதற்பொருட்டே தன் தேரினுக்கு ஒற்றைச்சககரத்தினையும் ஒற்றைக்குதிரையினையுங் கொண்டனன், நவமணிகளாலிழைக்கப்பட்டு விண்ணுலகவரைக்குமுயர்ந்த வீடுகளில் வெண்மை நிறந்தங்கிய பூரணச்சந்திரன் உராய்ந்துசெல்லுந்தோற்றமானது குவளைபோன்ற கண்களையுடைய அத்தலத்து மாத

ரது குளிர்ந்தமுகமாகிய களங்கமற்ற சந்திரனுக கொததிருக்கும்படி தனது களங்கததை மாற்றுவதற்கு முயற்சிசெயவதை யொத்திருக்கின்றது. யானைககூட்டங்கள் பொருந்திய குறுந தெருககளால்சூழப்பட்ட வீடுகளநிறைநத பெருவீதிகளில கட்டியுள்ள தோரணஙகளில தொங்கவிட்டுள்ள முததுககளின்பிரகாசத்தைப் போர்த்துககொண்டிருத்தலால அவ்விடததிலுள்ள அழகிய வீடுகள் விபூதி சன்னிததுககொண்டிருக்கு மககினிப்பிழம்பாகிய அரனையே யொததிருககும். எவவிடததும் மங்களகரமான விவாகங்களும, எவ்விடதது மினிமையான வாததியங்களும், எவ்விடத்துந தாமரைபோன்ற முகத்தினையும செவ்விய வாயினையுமுடைய உருத்திரகணிகைகள் நடனஙகளும், எவ்விடததும் வாசனை வீசப்பெற்ற முல்லைமாலையைத் தரித்த கொம்பனா கைகோத்தோடும கூததுககளும், எவ்விடத்துங காமசாகரக கலவியின்பமுமே பரவியிருப்பன. வேதமந்திரஙகளும் வேலைசெய்*மந்திரங்களும், ஓதுஞ†சந்தனங்களும் உரைககுஞ் சநதனஙகளும், காதல்கொள பாடலகளும ‡கருங்கணம்பாடல்களும், சீதளவாசமுந தேவர்கள் வாசமுமே நிறைநதிருபபன. பூரவததில் இநதிரனிழநத செலவமனைததினையு மறுபடியு மவனுககளிதத இவ்வூரளவில்லாத வளஙகளோடிருப்பது மோரதிசயமாமோ. இசசுநதரநகரானது துனபஙகளைநீககி ஞானமருளுதலா லிதற்கு ஞானசேத்திரமென்பா முன்னோ. விருட்சங்களுள "என்போல வெந்ததலததினுஞ் சிறநத திநதத திருவளாதல" மென்றுண்மையைத தெரிவிப்ப

---

*மநதிரமெனபது வீட்டினை

†சநதனமெனபது அனபுகொள ஸ்தனணியததினை

‡கருஙகணமபாடல எனபதனைக கரும-கண-அமபு-ஆடல எனபபிரிகக.

துபோல நல்லவாசனைவீசும விலவவனம் நிறைநது வினைகளை வெருட்டு மததலமானது விலவவனமெனப் பெயரெய்தும். தாழமபூவினை வாளாகவுடைய மன்மதனுக்கு உருவத்தைக கொடுததமையால் பூவாளூரென்றும, அமமன்மதனுககு இரதியையீநது மங்கலம் சிறப்பச்செய்த காரணததாலும், சநதிர சூடனுககுங குமுதைக்குங் கல்யாணம்நடந்த சிறப்பாலும, கல்யாணபுரமெனவு மழைககப்படும. இரயிதது என்னுமுனிக குத திருமூலநாதரிரஙகி அம்முனிவரது பிதிராகள் வடதிககிலுள்ள கயாக்ஷேததிரததின்பயனை யீஙகடையச்செய்ததால் கயாபுரியெனவுஞ் சொலலப்படும். இத்தலமானது திருவ்ானைககாவினுககு ஈசானதிசையி லொருயோசனை தூரத்திலும், தவததுறைககு வடதிசையில் இரண்டுகுரோச தூரததிலும, காவிரிககு உததரதிசையில் பொருநதியிருக்கும். பல சென்மஙகளில் பலதவஞ்செயதோரககன்றி மற்றையோர்கள இப்பூவாளூரினுககு வரவும் வணங்கவு மரிதாகும், இப்பூவாளூரி லொருதினம் வாழப்பெறின் அருககனுலகத்தும், அம்புலியுலகத்தும், ஆயிரஙகண்ணனுலகததும், அன்னவூர்தி யுலகத்தும், அச்சுதனுலகத்தும் வாழப்பெற்று அந்திவண்ணனடியிணை பின் மருவுவர். உடலெடுததலினுல் பிரயோசனமிதுவேயென்று இததலததில் முனிவருக்கு மமுதமூட்டுபவர் திருபாற்கடலிலுண்டான அமுதத்தையுணடு, தெய்வலோகத் தரம்பையராதி செவ்வாயமுதமாநதி, படவரவணிந்தவெஙகள் பரஞ்சுடரின் பரஞானவமுதமுங கொள்ளுவாரகள். அததலதில் ஆதிசைவர்கட்கும, பெரியோாகட்கும், கவிராஜர்கட்கும், சிவனடியார்கட்கும் வீடுகெட்டிககொடுததிடுபவர்ககுததேவர்கள் தஙகள தஙகள உலகினைககொடுக்க நோவாா. சநதிரசூடனுஞ் சஙகரன் தன்னுலகங கொடுக்கசசம்மதயைசெயவான். இததலத

தில் தினையளவுதவா தானஞ்செய்யின் ஆலவித்துப்போலப் பனை யளவுபயனைத்தரும் இத்தலத்தில் எத்தகையபாவங்கள் செய்தி டினும் மழையிற்பட்ட உப்புப்போல கரைந்துபோகும். பலவா கப்பன்னிப்பன்னிச் சொல்லுவதி லென்னபிரயோசனம் மே ருவையடுத்த காகமானது பொன்னிறமாவதுபோல இவ்வுல கத்து யாவரேனும் இத்தலத்திலிருந்து வாழப்பெற்றால் குற்ற மற்ற ஜீவன்முத்தரோயாய் விளங்குவர். கேண்மின் முனிவீர காள்! இத்தலத்துமகிமையைச்சொல்லிமுடித்தேன். இனித்தீர் த்தமகிமையைச் சொல்லுகின்றேன் என்று பொறியைநதுமாற லும்புண்ணியசூதர் புகலுவாராயினர்.

தலவிசேடச்சருக்கமுற்றிற்று.

தீர்த்தவிசேடச்சருக்கம்.

சர்ப்பாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிற சடாபார த்தினையுடைய சங்கரனார் இரயிக்குவனென்னுமோர்முனி உச் சிவிக்கும்பொருட்டு, அவரது பத்தியினுக்கிரங்கி வடக்கிலுள்ள கயாக்ஷேத்திரத்தினைக்காட்டிலு மிக்கமகிமையைப் பூவாளூரி னுக்கு விளைவிக்கவேற்படுத்திய*பற்குனியென்னு மருமைப் பெயரோடொரு தீர்த்தமானது விளங்கும். தேவர்கள், முனி வர்கள், பிதிரர்கள் முதலியவர்கட்குரிய கடன்களைச்செய்யாத சிதடர்களாயிருக்கினும், பொய், களவு, கள், காமமென்னும்பஞ் சமாபாதகங்களைச்செய்துவரு மகாபாவிகளாயினும், இழிந்த குலத்திற் பிறந்தவர்களாயினும், இத்தீர்த்தத்தில் முழுகின வாகள் அவர்கள் குற்றங்களினின்றுங் கரையேறுவர். தட்சி

*பற்குபாவம், ட்-ரீஙகல

ணகயாக்ஷேத்திரமென்று தேவர்களால் சிறப்பிக்கப்படுகின்ற பூவாளூரிலிருக்கும் பற்குனி தீர்த்தத்தினையும் பெரியோரெல்லாந் தட்சிணகங்கையென்றே பேசுகின்றனர். இந்நதியைச் சமீபித்துப் படிந்தவர்கட்கே யல்லாமல் மிகுந்த வாசையினால் அந்நதி சலத்தினைப் புறத்தேயத்திற் கொண்டுபோய் முழுகுவோர்க்கும் மிக்கபயனை விளைவிக்கும். சாமான்னியவூர்களில் ஆகமக்கிரமப்படி நடத்திய காரியங்களினால் விளையும் புண்ணியத்தைக் காட்டிலும் சிவத்தலங்களில் செய்யிற்பதின்மடங்கு பலனதிகமாம். தேவர்களிறைஞ்சும் புட்கரதீர்த்தங்களிற்செய்யின் நூறுமடங்குபல னதிகமாம். பூவாளூரொன்று உலகமெல்லாம் புகழுந்தலத்தி லன்போடு செய்வதினால் விளையும புண்ணியத்தினுக்கு உயர்வு மொப்பு அத்தலத்தின் கண்விரிநத புண்ணியங்களேயன்றிப் பிறதலங்களிலுண்டாகிய புண்ணியங்க ளெவ்வகையானு மொப்பாகா; அத்தகைய பூவாளூரிற்செய்த புண்ணியத்தினும் அத்தலத்துப் பற்குனிநதியிற்செய்த புண்ணிய மதிகம். அத்தீர்த்தத்திற்செய்த புண்ணியத்தினும் அத்தலத்தினுக் கலங்காரமாக விளங்கும் திருமூலநாதர் சந்நிதியிற் செய்திடும் புண்ணிய மதிகமதிகமாம். பொன்னையு மிரத்தினங்களையுங் கரைகளிலே கொணர்ந்துகொழிக்கும் அலைகளையுடைய பற்குனிநதியிற் கிரமப்படி ஸ்நானஞ்செய்து பிதிர்ததருப்பணஞ்செய்து அந்நதிதீரத்தின் ஆலவிருட்சத்தினடியிற் பிண்டமிடுபெவர்கள் பிதிர்க்கடனீங்கச் சிவலோகத்தினை யடைவர். அந்நதியிற் பிதிர்க்கடனை முடிக்கில் அப்பிதிரர்கள் நரகவேதனைகடந்து வேறுவிதமான வினைகளுங்கெட முத்தியடைந்து சிவானந்த சாகரத்தில் முழுகுவர். புண்ணியஞ் செய்யவேண்டிய காலமிதுவென்றும், தானத்தினை யேற்றுக்கொள்ளததக்க சற்பாததிர

ரிவனொன்றும் இப்பூவாளூரினிடத்தும், பற்குனி தீர்த்தத்தினி டத்தும் அத்தகைய மயக்கங்கொள்ளாது வினைகளை முடித்து வருவர். இழிஞராயினும் தானமேற்றுக்கொள்ள வொத்துக் கொண்டவனே சற்பாத்திரனும். புண்யகாலபேதமில்லை எக் காலமு மொருகாலமேயாம். பாவத்தினைப்போக்கடித்தற்கேது வாகிய தவத்தினையும், தானத்தினையுஞ்செய்ய விரும்புவோர் கையிற் பொருள்கிடைத்த வக்கணமேவத்தலத்திற் புரிந்தி டல்வேண்டும். அங்ஙனம்செய்யாது உத்திராயண தட்சிணா யணங்களினும், சூரியகிரகண சந்திரகிரகணங்களினும், அமா வாசி பருவங்களிலும், விதிபாதம் மாதப்பிரவேசங்களி லும், மாலியபட்சத்தும், மற்றைய புண்ணியகாலங்களில் மாத்திரம் சிராத்தஞ்செய்யின் அளவாகவே பிரயோசனமுண் டாம். அந்நதிதீரத்தில் அன்னசிரார்த்தஞ்செய்யச் சத்தியில் லேல், பிண்டப்பிரசாதமாயினுமிடுக, அதுவுஞ்செய்யச் சத்தி யிலரேல் எள்ளோடு சலத்தால் மந்திரஞ்சொல்லித் தருப்பணம் புரிக. இத்தருப்பணமானது வடகயாவில் அன்னசிராத்தஞ் செய்ததனுல்விளையும் புண்ணியத்தினை யுண்டாக்கும். இந்தப் பற்குனி தீர்த்தத்தில் அன்னதானஞ்செய்பவர் நினைப்பதற் கருமையாகிய வளப்பங்களை வாய்ந்த ஸ்ரீகண்டபரமசிவனை மூநதருளியிருக்கு மூலகத்தினுய்யானவனஞ்சேர்ந்து தானஞ் செய்த அன்னமொவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கற்பஞ் சிவ போகமனுவிப்பர். அந்நதிதீரத்தில் இரத்தினங்களேனும், பொன்னேனும், பூஷணமேனும், வஸ்திரமேனும், பொருளே னுஞ் சிவனடியார்கட்குத் தானஞ்செய்யின், பூமியிற்பெருஞ் செல்வத்தோடுகூடிய சக்கிரவர்த்திகளாய்ப்பிறந்து வாழ்ந்து, பின்னர் சிவலோகஞ்சேர்ந்து சிவானந்தசாகரத்தில் மூழ்கு வர். அந்நதியின் நீரையுண்ணும் மிருகங்களும், பறவைகளும்,

அந்நீரையுண்ணு மீன்களும், அந்த நிசலத்தால் விளைந்த விருட்சங்களும், செடிகளும், கொடிகளும் அவைகளின் காய்கனிகளும் அவற்றினையுண்ட வுயிர்களும் தங்களாணவவினையைக் கெடுத்துத் தேவராகுமெனில் மனிதர்கள் மோட்ச மடைவாரென்பது மதிசயமோ! இந்தப்பிரகாரமாகப் பாவங்களையெல்லாம் போக்கடிக்கும் அந்தத்தியின் பரிசினைப்பகர்ந்தோம். இனிமேல் ஏ முனிவீர்காள்! இப்பிரபஞ்சத்தின் குற்றங்களையெல்லாங் குறைக்கும் பூவாளூரிலெழுந்தருளியிருக்கு மெங்கள் பெருமானின் பெருமைகளைப் பேசுவோங் கேட்பீர்களெனச் சூதர் சொல்லத்தொடங்கினார்.

தீர்த்தவிசேடச்சருக்கமுற்றிற்று.

மூர்த்திவிசேடச்சருக்கம்.

அழகானது தங்கி வீசும்வாசனையோடுங்கூடிய நீண்ட தும்பிக்கையினையும், நான்குதந்தங்களையும், மிருதுவானநடையினையுமுடைய அயிராவதயானையையூர்ந்து செல்லுந் தேவேந்திரனது அருச்சனைக் கிரங்கி யவனிழந்துவிட்ட செல்வங்களையெல்லா மறுபடியு மவனுக்கீந்து கல்யாணபுரத்திலெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானைத் திருமூலநாதனென்றுரைப்பர். வரிகளைவாய்ந்த சிறைகளையுடைய வண்டுகள் தேனுண்டு ரீங்காரஞ்செய்யுந் தாமரையின்கண்ணே வீற்றிருக்குமிலக்குமியானவள்மிகுந்த வன்பினால் வந்தனைபுரிந்து செல்வப்பொருள் வழங்குதற்குரிமையைச் சுமத்தலினாலும், வில்வவிருட்சத்தின்கீ ழெழுந்தருளி யிருத்தலினாலும், அப்பெயர்களால

விளங்கும் கல்யாணபுரததி லெழுநதருளியிருககும பெருமா னைததுதிதருவருவா.

செவ்விய தீககொழுந்தினை நீட்டியதென்னச் சிவநது பிரகாசித்தெழூஉம் சடாபாரத்தினையுடைய முனிவாகள்செய்த வேள்வியினுக்கு கருளகூர்ந்து மெய்ஞ்ஞானததை யதி சீககிரமாகவருளிய காரணத்தால் திருமூலநாதருக்கு உலக முழுவதும் ஞானத்தானேசனெனவும், வில்வவனத்தி லெழுநதருளி யிருததலினுல் வில்வவனநாதனென்றும், மங்கள மிகுந்த மாங்கலியத்தை இரதிதேவிக்குதவியதால் கல்யாண வனநாதனென்றும், சிவனடியா ரொருவருக்கிரங்கி அவரது விவாகத்தினை முடிக்கும்பொருட்டுச் சிததவடிவங்கொண்டு நடநததால் சித்தநாதனென்றும், பூவாளூரமாந்த புண்ணியனை ப்புகலுவா. இத்தகைய திருநாமங்களி லொன்றினையேனு முரைப்பவருக்கு அவர்செய்த பாவங்களனைத்து மடியோடே மாய்ந்துவிடும். தேவர்கள்கூறில் தேவலோகங்களிலுள்ள போ கங்களனைத்தினையு மவர்கட்கூட்டிவைக்கும். போகத்தினை வெறுத்தோர் கூறின் கங்கையையணிந்த கண்ணுதலோன் கழலடியிற்சேர்ப்பிக்கும். இப்பெயர்களிலொன்றைத் தம்புத்தி ரர்கட்கிட்டழைப்பாராயின் தங்கள் புததிரர் மித்திரர் களத்தி ரர்களுடனே சகலபோகங்களையு மனுபவித்து, பிணியாதி பாவஙகளினின்று நீங்கி, சொர்க்கலோகங்களில்மிகுந்த வளங் களையனுபவிப்பார். அப்பெயரை வாய்ந்த வப்புத்திரர்களும் அஙஙனமேவாழ்ந்துஅக்கதியைமருவுவார். மறைகள் தினமுழங் கிக்கொண்டிருக்கும் பூவாளூர்ப்பெருமானது நாமமிட்டழைக் குமிருகம் பறவை முதலியனவும் பூர்வசென்மங்களின் பாவ நீங்கி பலவளங்களும் பொருந்திய துறக்கத்திலே அரம்பைய ராதியிடததுப் போகங்களை யனுபவித்துப் பின்னர் திங்களை

யுங் கங்கையையு முடியிற்றரித்த சிவபெருமானது தொண்டியற்றி யருள்பெற்றய்யும். அனேக முனிவர்கள் பூசிக்கப்பெற்ற பெருமைபொருந்திய வில்வவனத்திலுள்ள பெருமானது ஆலயத்தில் நுழைந்து பசுமுதலிய மிருகங்கள் தம்பசிகருப் புல்மேய்ந்திடின் அவை சிவபணிசெய்தனவாகவே கொண்டு அவைகளின் குற்றமகற்றிப் பெருமான் சொற்கலோகத்திற் சேர்ப்பான். வில்வவனநாதருக்கென்றே பிரார்த்தனை செய்து அவ்விடம் அடியாரால் விடப்பட்ட பூவைகள், கிளிகள், *யூகங்கள், †இரலைகள், தகர்கள் இவையனைத்துந் தங்கள் முழுவினைகளையுமொழித்துக் கயிலாயத்திற் சிவகணங்களாகிப் பெருமானது கோயிலிலே வாசஞ் செய்துகொண்டிருக்கும் பாக்கியத்தைப்பெறுவன.

ஒருவன் கடன்பட்டாயினும், செய்யத்தகாத காரியங்களைச் செய்தாயினும், தங்கள் மனைவி மைந்தர்களுக்காக்குமறிவிலிகள்போல, இடபவாகனத்தி லெழுந்தருளு மெமது திருமூலநாதருக்குப் பொருளுதவுவரேல் அவரே யன்பர்களாவார். அதிக செல்வவந்தர்களாயிருந்துந் திருமூலநாதனுக்குதவாரேல் அவர்கள் பொய்யன்பினர்களே யாவர். மெய்யன்பினர்கள் வேண்டிய வேண்டியபொருள்களை யீந்து விரும்பிய விரும்பிய வருளைப் பெற்றுக்கொள்வர். பொய்யன்பினர்கள் பொருளையீயாது வாயாற்புகழ்ந்தாரேனும் பூவாளூர் புண்ணியன் பதத்தையடைவர். அந்தோ! உய்யவிரும்புவார் பொய்ப்பொருளை யுறுதியாகக் கொள்வதும் பேதைமையேயாம். தரித்திரர்கள் பசியைத்தணியாது பொருளைக் காப்பாற்றி வைத்துக்

---

*யூகம்-கருங்குரங்கு. †இரலை-கலைமான்.

கொண்டிருக்குஞ்செல்வர்கள் நரகத்தடைவரெனில், பூவாளூர்த் திருமூலநாதரின் பூசையாதிகட்குதவிச் சிறப்புசெய்யாது சேர்த்துவைத்திருக்கும் பொருளுடையார் நரகத்தையடைவரென்பதற்குத் தடையுண்டோ, செல்வமில்லாதவர்கள் சிவசாமபிராச்சியமாகிய முத்தியடைய விரும்பின் திருமூலநாதர் ஆலயத்திற்சென்று புல்செதுக்கல், அலகிடுதல், கோமயத்தைத் தெளித்தல், கல்முதலிய குற்றங்களைக்களைதல், புட்பமாலை கட்டித்தரல் முதலிய பணிசெய்வரேல் லவசியம் பெறுவர். தேகத்தில் தீராநோயுற்றுத் திருப்பணிசெய்வதற்குச் சத்தியிலராய வினையைக்கெடுத்து வீடடைய விருப்பமுடையார் பற்குனிநதியில் முழுகி, கோயில்வலம்வந்து, காலந்தோறுந் திருமூலநாதரைத் தரிசித்து, தியானஞ்செய்து, அவர்புகழையெடுத்துப் பேசல்வேண்டும். தங்கள் ஆணவவினையையடக்கியாள வேண்டுபவர் பிரதிதினம் ஆலயத்திற்சென்று தரிசித்திடுக. அதற்கும் வலியிலரேல் தங்கள்வீட்டின் தலைக்கடையினின்று கும்பிடுக. அதுவுங்கூடாரேல் படுக்கையிலிருந்தபடி வில்வவனத்து விமலனார் திருவுருவைச்சிந்தித்து அவன் பெயரைப் பன்னிடுக திருமூலநாதரது திருப்பணி கைங்கரியமானது பிறப்பு, பிணி, பாவம் என்னுமிவைகளை வெட்டுதற்கோர் வாளாயுதமாகும். அவற்றுள்ளு முயர்ந்தது இறைவர் திருக்கோயில்கட்டும் புண்ணியமேயாம். பொருளமிக்குடையார் செங்கல்லினாலும், கருங்கலலினாலுங் கட்டிடுக. பொருளில்லார் மரத்தாலேனும், மண்ணாலேனும், திரணத்தாலேனுஞ் செய்திடுக தேவதேவனாகிய மகாதேவன இருவருக்குஞ் சமபலனையே யளிப்பன் பொருளுடையார் திரணத்தாற்கட்டியதினைவிட மண்ணினாற் கட்டியதற்குப் புண்ணிய மதிகம், மண்ணினாற் கட்டியதைவிட மரத்தாற்கட்டியதற்கு இருமட

ஙகு புண்ணியமதிகம். மரத்தாற்கட்டியதைவிட செஙகல் லாற்கட்டியதறகு நாற்பங்கு புண்ணியமதிகம். செங்கல்லாற் கட்டியதைவிட கருஙகல்லாற்கட்டியதற்கு எட்டுமடஙகு அதி கம் நூதனமாக ஆலயம் பிரதிட்டை செயவதினும் பழைய வாலயங்களைப் புதிப்பித்தல் பெருமபுண்ணியமாம விலவவ னததீசன் ஆலயத்தைப் புதுககுவோா சிவனேயாவரலலது வேறு புண்ணிய மடையார்கள. தங்களிடசதிற் கிடைதத பொருளுக்குத்தககபடி பூவாளுா ஆலயததிற சிறப்புசெயத வாகள் தங்கள் பாவஙகளினின்றும் இமைநேரத்தினீங்கி வட கயிலையடைந்து சிவகணங்களாய் வாழ்வாா இவாகள்சுற்றத தினா பொன்னுலகையடைந்து பதினைன்கு தேவேநதிராகள வாழுமளவும் போகத்தை யனுபவிப்பா. நம்முடைய திருமூல நாதரொழுந்தருள ஆலய மினிதுசெயதோா தஙகள பிதிரர்க ளெல்லா நீஙகாத நரகததினினறு நீங்கிச சுவாககலோகததில பொருந்துவா. அவாகள் குமெபம் சூரிய சநதிரர் உள்ளவளவு கெடாதுவாழ்வர். எவனொருவன திருப்பணி சிவாலயததின கண்ணே செய்கின்ருனே அவனபாவமப்போதே நசிக்கும். பாக்கியமெல்லா மவனுக்கே பலிககும். விண்ணாட்டு வேநத னும் அவனுணைககஞ்சுவன் அவனினைதத கருமஙகளெல்லாம பூமியிலெளிதாய் முடியும். அததகையன்பெருமையை யெடுத துச்சொல்வா ராரிருககின்ருாகள்.

நாததிகம் பேசு நாவினர், பிறர் துன்பப்பட கோள சொல்லுபவா, சற்பாததிரததிற் பொருளைககொடாதவர், மூத தோர் தாய்தந்தையா மொழிகளைககேளாதவர், பிறருககுக கொடுதத திரவியததைப் பிடுஙகிககொண்டவா, அநநியர்பொ ருளைக் கவாந்தவர், குற்றஞ்செய்தவர், அயலான் மனைவியின் மீது மனம் வைத்தவா, புததிரரைவி ற்றவா, பிறா செல்வங்

களைக்கண்டு பொறாமை கொண்டவர், சிவநிவேதனஞ்செய்யாது அன்னமுண்டவர், வேதபாராயணம் பண்ணுதவர், அகினிகாரியஞ் செய்யாதவர், வேதாகமங்களிற்கூறு மியாகத்தினைச்செய்யாதவர், சுத்தவீரனை வஞ்சனையால் கொன்றவர், விரதமனுட்டியாதவர், யுத்தத்தில் மோசஞ்செய்து செயித்தவர், பெண்கள்மீது அவதூறுசொல்பவர், ஊரைக்கெடுத்தவர், மாமிசம்விற்றவர், அதனையுண்டவர், அதனையுண்ணச்செய்தவர், நன்றியில்லாதவர், ஆலயத்திலாடவரைப்புணர்ந்தவர், பொய்பேசுபவர், பிராமணரைக் கொன்றவர், மாதர்களைக்கொன்றவர், நிழல்தரு விருட்சங்களை வெட்டினவர், கிணறுதடாகங்களைத் தூர்த்தவர், குருவினுக்குத் துன்பஞ்செய்தவர், கருவினையழித்தவர், கன்னிகையைப்புணர்ந்தவர் முதலிய உபபாதகத்தவரும்; ஆசாரியனைக்கொன்றவர், ஆசாரியன் மனைவிதோள் சேர்ந்தவர் கள்ளுண்டவர், பொன்திருடினவர், இவர்களைச்சேர்ந்தவர் முதலிய மாபாதகத்தவரும்; சிவநிந்தனை செய்தவர், சிவாகமங்களைத்தூஷித்தவர், சிவபூசைசெய்யாதவர்முதலிய அதிபாதகத்தவரும்; உய்ந்து புண்ணியத்தினையடையவேண்டு மாயின் சிவாலயப்பிரதிட்டை யொன்றேசாலும்.

சிவாலயங்களில் செய்யவேண்டிய கைங்கரியங்களாகிய உருத்திரகணிகை, யானை, குதிரை, பசு, நிலம், பாத்திர முதலியவற்றுள் தங்கட்குவாய்ந்தவளவீந்து இறைஞ்சிடினும் அப்பாதகங்கள்போம். இவ்வாறு அப்பாதகங்களைக்கழிக்க வேலாதவா எளிதிலே போககுவதற்குபாயமாவன, பஞ்சமி, பூரணை, சுக்கிலபட்சத்துச சதுர்த்தசி, அட்டமி, திருவாதிரை, மாசிமகம், ஆடிமுதலமாவாசைகூடிய சோமவாரம், பங்குனிபூரணை, பங்குனி உத்தரம், சோமவாரம்வரு முதலமாவாசை, ஆதி

வாரததுச்சத்தமி இவைதங்கிய உத்தராயண புண்ணியகாலங் களில் பற்குனிநதியில் ஸ்நானஞ்செய்துவேதபிராமணர்கட்கு இயன்ற திரவியந்தந்து, பசுநெய்வார்த்துத் தாமரை நூல்திரி யிட்டு, ஞானநாயகனாகிய திருமூலர் சந்நிதானத்தில் விளக் கேற்றி, நறுந்தூபமிட்டுப் பசும்பாற்கொண்டு மந்திரத்தாலபி டேகஞ்செய்து குற்றமில்லாத சுகந்தத்தாலும், வில்வத்தாலும், அருச்சித்து, அறுசுவையடிசில் நிவேதித்து, சிவனடியார்களா கிய பிராமணர்களை யுண்பித்து, இறைஞ்சி வந்தனைசெயின் எத்தகைய பாதகங்களும் இமையளவில் நீங்கப்பெற்று வானு லகமடைவர். பாதகங்களைச்செய்யாத புண்ணியர்கள் உருவிலி யாகிய மன்மதனுக்குருவளித்த உமாமகேசன் உச்சியில அபி டேகம்புரிந்தால் ஏழுலகு நடுநடுங்கும்படி மான்மழு சதுர்புய காளகண்ட திரிநேத்திரர்களாய் விளங்குவா. அளவில்லாத புக ழோடுங்கூடிய பூவாளூர்நாதர் திருமுடியில் புட்பஞ்சாத்து வார் சந்திரசூடராய் விளங்குவர். பிரதட்சணம்வந்து சாஷ் டாங்க நமஸ்காரஞ்செய்து கைகுவிக்கின், தேவர்களெதிரில் நின்று கைகட்டி நல்லவரங்களைக்கேட்டு யாசித்து நிற்ப நாயக ராய்வீற்றிருப்பா. சகல வளப்பத்தோடுங்கூடிய வில்வவனத் தில் ஆதிசைவப்பிராமண ரொருவருக்கு வீடொன்றுகட்டி யீந்து அவ்வூரில் தாபிக்கில் தேவர்களெல்லாந் தொழுதேத்த ஓர் சிவலிங்கப் பிரதிட்டைபண்ணிய பலனையொக்கும். சிவ னடியார்களை அவ்வூரில் குடியேற்றினு மப்பலனே யடைவர். திருமூலநாதர் திருக்கோயிலில் அலகிட்டு, மெழுகி, சுதை யால் கோலந்தீட்டிவருவரேல் அவர்களுடையவீட்டில் இலக் குமியானவள் குடியிருந்து எக்காலமு நீங்காமற் பலவிதப் பட்ட செல்வங்களால் அலங்கரித்துவருவள். ஆலகாலவிடத் தாலலங்கரிக்கப்பட்டிருக்கிற வழகிய மிடற்றினையுடைய அம

லணுகிய வில்வவனத்துத் திருமூலநாதருக்கு நித்திய, நைமித்திக, பஞ்சபருவத் திருவிழாக்களை நடத்திவருவரேல் அவர்களவாழும் வீடுகள் எக்காலத்தும் நீங்காத மங்களகோலமே பொலிந்துகொண்டிருக்கும், திருமூலநாதர் வெள்ளைவிடையின்மீது குங்குமசவுந்தரிசமேதராய்த் திருவோலக்கங்கொண்டருளுந் திருவிழாவினைத் தரிசிக்கப்பெற்றோர் தங்கள் ஆணவமலங்கெட சிவன்முத்தர்களாய் வீற்றிருப்பர். செல்வமலிந்த திருமூலநாதராய் விளங்கும் சிவலிங்கப்பெருமானின் திருவருட்பெருமையைச் சொல்வகையினை லெடுத்துப்பேச முற்றுமோ. பரிசுத்தமபொருந்திய முனிவிர்காள்? இனியத்தலத்தில் வினைகெடும்படி வேள்விவளர்த்த வித்தைதைசசொல்லுவேன் கேட்பீரகளென்று வியாசமாணுக்கர்விளம்புவாராயினா.

மூர்த்திவிசேடச்சருக்கமுற்றிற்று

வேள்விச்சருக்கம்.

இலக்குமிதேவிக்கிருப்பிடமாகி, மணிமாடங்களசெறிந்து, பலவளப்பங்கள் நிறையப்பெற்றுத் தெய்வநாட்டினையொத்திருக்குந் தவத்துறையிற்சென்று வினைமுழுதும விடைகொண்டேகப்பூசித்துப் பிருகு, வங்கிரசு, வசிட்டன், கசியபன், அத்திரி, குச்சன், கவுதமன் இவர்களெழுவரு மாதவம்புரிந்துவருங்காலத்தில் இவர்கள் மைந்தர்களாகிய பாற்கவர், ஆங்கீரசர், வாசிட்டர், காசிபர், ஆத்திரேயர், கவுச்சிகர், கவுதமீயர் என்னவோதும் எழுபதினமர்ஒருங்குகூடி, புரம், வனம்,க்ஷேத்திரம், விமானம ஐந்துஞ்சிறந்ததல மெங்குள்ளதென்று ஒருவருக்கொருவர் விசாரித்து நெடுங்காலந் தமமுடையவறிவினு

லாய்ந்து தெளியாது திடீலெனவெழுந்து கருங்காலனுயிர் குடித்த செங்காலனாகிய சிவபிரானிடத்திலன்புடைய தங்கள் தந்தையாகளை யடுத்துத் தாள்களை வணங்கிக்கேட்கக் கருணையினால் எழுமுனிவர்களுந் தங்கள் புதல்வர்களாகிய எழுபதின்மருக்கு முணர்த்துவாகள். அறிவிற்சிறந்த அரும் புதல்வீர் கேண்மின், எத்தகைய புரங்களினும் பூவாளூரென்னும் புரமும், வனங்களில் வில்வவனமும், நதிகளில் பற்குனிநதியும், தலங்களில் ஞானத்தலமும், விமானங்களில் கல்யாணவிமானமுஞ்சிறந்திருப்பன. இவ்வைந்து மோரிடத்துச்சிறந்து தங்கட்குத்தாங்களே யொத்திருக்கு மொருதானமானது திருமங்கலமெனனும் பூவாளூரேயாம். அத்தலத்தில் திருமூலநாதரென்னு மருமைப்பெயரோடு உத்தமத்திலுத்தமமாய் ஒளிர்கின்ற சுயம்புமூர்த்தியானச் சிவலிங்கப்பெருமான் எத்திக்கிலுள்ளவர்கட்குங் கிருபைபுரிந்து வீற்றிருக்கு மத்தலத்தினுக்கேகுவீரென்றனர். உடனே எழுபது முனிவர்களும் அகமகிழ்ந்து, முகமலர்ந்து, தந்தையரைப்பணிந்து, எழுந்து ஞானத்தலமாகிய பூவாளூரெய்தி, பற்குனிநதியிற்படிந்து, கிரமப்படி கடன்களைச்செய்து, மிக்கவன்பினோடு திருமூலர் சந்நிதானத்தின முன்பு காந்தமிழுக்கும் இரும்பூசியைப்போலச்சார்ந்து, துதிபுரிந்து, தங்கட்குள் ஆராயத்துவக்கினர்.

இத்தலத்தின் மகிமையை யென்னவென்றுரைப்போம், இவ்வெல்லையை யடைந்த மாத்திரத்தில் தலைமேலிருந்த பெரும்பார நீக்கியதுபோலச் சிந்தையின்கண்ணிருந்த துன்பங்களியாவும் நீங்கப்பெற்றோம். ஆதலாலுயர்ந்த வித்தலத்தி லிருந்து போகத்தை விரும்புதலே நலமாம். அதுவே வியாவுமாம். ஆயின் காலாந்தரங்களில் மரணமடையுந் தேவர்கள்போகத்தை யிச்சிக்கின் அது மறுபடியும் பிறப்பில்சார்ந்து உயிர

தளாவதன்றி மெய்ஞ்ஞானநதமடையும்விதத்தைக்காணோம். எல்லாவற்றினிக்கு மேலென்று முயன்றடைவது விததக யோக முதலியவற்றால்லிளையு மின்பமும், பிரமாதிதேவாகள சூழ்ந்திருக்குங்கதியுமன்று. நமதாசையானது நீங்கி யுத்தம மாகிய மெய்ஞ்ஞானத்தை யடையும்வழியில்முயலவேண்டும். அத்தகையஞான முக்கண்பெருமானால் உணர்வதன்றி ஆன்ம வர்க்கத்தால் அறியுந்திறமன்று. அந்தச்சேதனனாய் விளங்குஞ் சிவபெருமான் திருவுளமகிழும்வண்ணங் குற்றமற்ற வேள்வி யொன்று செய்வோமெனச் செய்யத்துவக்கினர். செங்கற்க ளால் வேதிகைகள்கிரமப்படிக்கட்டி மணிகளினாலும், பொன்க ளினாலும்,பாத்திரங்கள்செய்து *சோமமாதிதிரவியவகைகளெ ல்லாஞ் சேகரித்துத் தனித்தனித் தாங்கள் தொடங்கினார்கள்.

†இருத்துவிக்களும் நெருங்கிய‡மானருமெல்லோருந் தங் கள் கருத்தில் மிகுந்தவாசையினால் தீக்கையைக்கலந்தனா கள் பரிசுத்தமாகிய சிவபெருமான் சந்நிதியி லவருக்குரிய பெருத்த சைவசத்திரயாகமென்னும் வேள்வியை நடத்தத

---

*சோமம்-ஓர்பூண்டு. இது அக்கினிஷ்டோமத்தில் ஸோ மத்தின் சாற்றைப்பிழியும்கிரியைக்கு அபிஷவம்என்றுபெயர் அக்கிரியையின்படி பிழியப்பட்டிருக்கிறது அபிஷு-தம்.

†இருத்துவிக்கு-யாகத்தில் யெசமானிடத்தில் தக்ஷிணை வாங்கிக்கொண்டு, அதற்குரிய ஹோமமுதலானதொழில்களை நடத்துகிறவர்களுக்கு 'ருத்விக்கு' என்றுபேர் அவர்கள் 'அக னீத்திரர்' 'ஹோதா' 'பிரம்மா' முதலாகிய வெவ்வேறுபெயர் களையுடைய கசு-பேர்கள். தேவயாகஙகளில், அக்கினி, ஹோ தாவாயிருப்பவர் ஹோதாபதத்திற்கு, அழைக்கிறவனொன்றும் ஹோமம்பண்ணுகிறவனொன்றும், ஆததமாகும்.

‡மானர்-புடையார் அதாவது யாகத்தில் இடையூறுவா ராமல் பாதுகாப்போா.

தொடங்கி*இட்டி,†பிரவர்க்கியம்,‡அக்கினிட்டோமம், விதையாதியாகச் சமைத்தகள்முயன்ற சட்டகாலங்கள் மூன்றினுஞ் ०சவனங்கள்மூன்றினையும் கற்பநூலில் சொல்லியபடி நடத்தினார். குற்றமற்ற சாமவேதியர்கள் கானந்தொடங்கினர் ஓதிர்கணுத்தினாகள் சமுசனையை யியற்றினார்கள். அத்துவரிக்கணத்தர் அத்துவாரம்பண்ணினர்கள். பிரகாசமலிந்த வெண்கோணம் பொருந்தச்செய்து யூபமலங்கரித்தனர். நானுவிதமாகிய தெய்வப்பசுக்களைப் பலகயிற்றினுற் கட்டிப்பிணித்து வேதமந்திரங்களினு லவற்றினுன்மாவை அத்தேகங்களினின்றும் பிரித்து அப்பசுக்களின் வபையையெடுத்து அக்கினியிலிட்டு மிருந்த வங்கங்களினுலே ஆகுதி விதிப்படி செய்தனர் அவ்வேள்வியின்கண்ணே யிருந்தவர்களையும், மற்றைய பிராமணர்களையுந் தேவனுகவே பாவித்துப் பூசைமுதலிய வியற்றினர். இவ்வாறு மாதவர்கள்தந்த அவிப்பாகத்தினை யினிதேற்றுக்கொண்டு பிரகாசம்வீசு மிரத்தினங்களிழைத்த கிரீடங்களைத்தரித்த தேவலோகத்தமரர் மகிழ்ச்சி கூர்ந்தாகள் அமரர்கட்கு அமரனுய்விளங்கு மமலனுகிய வில்வவனநாதனைக்குறித்துப் பரிசுத்தம்பொருந்திய வேள்வியை நடத்திய மாதவர்கள் விளக்கத்தினை யுரைத்தேம், வண்டுகள் ரீங்காரஞ் செய்யுந் தாமரைமலரின்கண்ணே யெழுந்தருளியிருக்கும் பிரமதேவனுனவர் அவ்விடத்தினுக்குவந்தெழுந்தருளியதைச் சொல்லுதுங் கேட்பீரெனச் சூதமாதவ னுரைக்கின்றனர்.

வேள்விச்சருக்கமுற்றிற்று.

---

*இட்டி=யாகம். †பிரவர்க்கியம்=ஓமத்தீ. ‡அக்கினிட்டோமம்=சோமயாகம்.

०சவனம்=ஸோமாபிஷேவம், அக்கினிட்டோமமானது; பிராதஸ்ஸவனம், மாத்தியந்தினஸவனம், ருதிீயஸவனம் என மூன்றுபாகங்களையுடையதாம்.

பிரமன்வரவுச்சருக்கம்.

இந்தப்பிரகார மகத்தினைத தவததினர்கள் முடித்துக கொண்டிருக்கிறகாலத்து இப்பிரபஞ்சததின் நல்ல வளப்பங களைக்காணுங் கருத்துடையராய்ப் பிரமனானவர் தன்னிச்சை யால் சத்தியலோகததைவிட்டு நீங்கி அன்னவாகனரூடராய் ஆகாயவழியாகச் செல்லும்போது, பிரகாசம்வளரு மாடங்கள் மலிந்த வில்வவனத்திற்கு நேரே சூரியன் சஞ்சரிககும்வானில் வர, அன்னவூர்தியானது நெஞ்சந்துன்பப்படும்படிஅசையாது கன்மலைபோலத் தம்பிதது நின்றுவிட்டது. பிரமாவானவா தனது வாகனமாகிய அன்னததினமுன்னேயும், பின்னேயும், நான்கு திக்குகளிளேயும் பார்த்து என்னகாரணத்தால் இவ்வா றசையாது நின்றுவிட்டதென வாலோசித்துப் பூமியைநோக கிப்பார்ககையில் வில்வவனநாதர் சந்நிதானத்தின முன்பு மாதவாகள்செய்கின்ற யாகததின் தீம்புகையானது அன்னத் தின்முகத்தினைத் தாக்கினவென்று தீர்மானிதது, அவாகள சொல்லும் வேதமந்திரங்களைக காதாறகேட்டு, இதுமிகுநத சிறந்ததலமென வெண்ணி அச்சமும், அனபுந தோனற அதி சயத்த மனமுடையவராய், உச்சியிலிரண்டு கைகளையுங்குவித் தவராய், வேதமொலிக்கு நாவினையுடையவராய் அன்னவாக னததை விட்டிறங்கிப் பூவாளூர்வந்து சோநதனா. அககாலத திலவ்விடத்துச் சிலர்வேதவாதமும், சிலர்பிரமவாதமும், சிலா கருமவாதமும், சிலர் ஞானவாதமும், சிலர் கணிதவாதமும், சிலர் நீதிவாதமும், சிலர் கற்பவாதமும், சிலர் புராணவாத மும், சிலராகமவாதமும், சிலர் வியாகரணவாதமும், சிலர் நிக ணடுவாதமும், சிலர் காப்பியவாதமும், சிலர் நாடகவாதமும,

சிலரலங்காரவாதமும், சிலா தனுர்வேதவாதமும், சிலர் மற்ற கலைஞானவாதமும இருடிகள் செய்துகொண்டிருக்க, தெய்வ வேள்வி முன்னேதோன்ற அவ்வியமகன்ற வறிவையுடைய பிரமாவானவா மகிழ்ந்து அதிசீக்கிரமாக ஸ்நாநமாதி நித்திய கடனை முடித்துக்கொண்டு செல்ல வுடனே வேள்வியியற்று மாதவாகள் எழுந்து கந்தமூலங்களைக் கையுறையாக வேந்திச செல்ல வவாகளையெல்லாங் கரத்தாலமர்த்திக் கோயிற்புகுந் தனா, முனிவாகள் தன்னைச்சூழ ஆலயத்திற்சென்ற வேதனு னவா திருமூலநாதரின் திருவடிகளில வீழ்ந்து பணிந்து எழுந்து ஆடிப்பாடி யாசையோடு வலமவந்து காப்பாய் காப்பா யெனவிரந்து, இத்தலத்தின் பெருமையைச் சற்றுமெண்ணுத வெளியேனுக்குப பததியருளவேண்டி, யனனந்தன்னையாகாய வழியிலடியெடுத்துவைக்க,வொட்டாதுசெய்து என்னையிங்கு வரச்செய்த கருணைவள்ளலே என்பிழைகளைப் பொறுப்பாயெ ன்றுரைத்து விடைபெற்றுததிரும்பி, வேள்வியாற்று மந்தணா முகத்தை நோக்கிச சொல்லுவாராயினா. அந்தணீர்! இப்பூமி யில திருமூலநாதரது இனிமையானவருளுக் குரியவராயினீர் இதைக்காட்டிலுமுயர்ந்த கருமமென்ன விருக்கிறதென்று மந் திரவேளவிச்சாலையில் மலர்ந்தமுகத்தோடு புகுந்தனர். அவ் வேள்விச்சாலையை யடுத்தமாத்திரத்து அங்கிருந்த தாபதர்கள் அழகிய தாமரையினையே யாலயமாகக்கொண்ட பிரமனுக்கு ஆதனம், அருக்கிய மாலைமுதலிய வுதவி இனிமையான பழ முதலிய வீந்து பாற்கடலிலுண்டாகிய வமுதம்போன்ற பெரு மைபொருந்தியதோத்திரங்களால் தோத்தரிப்பாராயினர். அன் னவாகளனே! தேவரீரிங்கெழுந்தருளிய மாத்திரத்தில் சிவ பெருமானிடத் தன்பில்லாத யாகங்கள் செய்யுமழகியமக மிடை யூறின்றிநிறைவேறியது. நிலைபெற்ற வில்வவனநாதரு மகிழ்ச

சியாகவே கொண்டனர் நெருங்கிய அவிகள்சொரிந்து செய்கின்ற வேள்வியினால் நாங்களெல்லோரும் வில்வவனநாதரருளினால் வேள்வியின் பயனைப்பெற்றனம். அன்றியு நீக்குவதற்கருமையாகிய இப்பிரபஞ்சத்தின் பந்தமு மிப்போதே நீக்கினோம். பரமானந்தப் பரவையினும் படிந்தோமென்றனர். செவ்விய சொற்களினாலே யிவ்வாறுகூறிப் பிரமனோடு எஞ்சிய வேள்வியினையுமுடித்து, இனிமையான புண்ணியங்கள் மென்மேலோங்க வளருஞ்சுத்தியே கனிதினத்தின் பெருமானுக்குரிய நெய்தோயப்பெற்ற அவியை அழலில் இட்டார்கள். அப்போது, சனகாதி நால்வர்வணங்கும் பொன்மயமான நூபுரத்தினை யணிந்த திருவடிகளையுடைய சிவபெருமான் உமையுடனே வலிய வெள்ளைவிடையின்மீது பூதகணங்கள தன்னைச்சூழ்ந்து நெருங்க, முனிவர் சொரிந்த வபையானது அவியினின்றும் தனது முகத்தினிடத்துக்கமழ வெழுந்தருளினர். சயசயவென்ற தோத்திரத்தோடு ஒப்பற்ற ஆகாயமுகட்டில் நெருங்கி பலம்பொருந்திய நீண்ட வாயுதங்களுடைய தேவர்கள் மலர்மாரிபொழியப் பஞ்சவாத்தியங்களுமுணடாக அயன்முதலிய மாதவர்கள்பலரும் அஞ்சலித்த கரங்களோடு எழுந்திருந்து நீங்காதவாசையினால் என்புமுழுது நெக்கு நெக்குருக, தேகமுழுவதும் வழிந்து விழிகளினின்றுவருங கண்ணீரில்கலநதவிபூதி சேறாகப் பூமியில் விழுந்து எழுநது பலமுறை சூழ்ந்து எத்துவாராயினர்.

புள்ளாகியநான்முகனீண்முடியும்போனேனமதாகியமால் பதமுங், தள்ளாவலியுமனமுந்தலைமைச்சலமுந்தளரத்துருவிப் பணியு, நள்ளாரமுதச்சுவையேசரணநராயினுநன்மையினைத் துனாபால், விள்ளாதவிளங்கொளியேசரணமெய்ஞ்ஞானதலத திறைவாசரணம்.

தண்ணாமதிவேய்ந்தபிரான்சரணஞ் தழலாடியசங்கரனே சரணம, பண்ணார்தருவீணைதராசரணம்பனிமால்வரையில்மரு காசபணங், கண்ணார்தருவாணுதலாய்சரணங்கடமாகரியீருரி யாய்சரணம், விண்ணாடாவிழுததுணைவாசரணமெய்ஞ்ஞானத லத்திறைவாசரணம்.

சங்கக்குழையாய்சரணஞ்சரணஞ்சங்கத்தலைவாசரணஞ் சரணஞ், கங்கைச்சடையாய்சரணஞ்சரணங்கங்கைத்தலைவாசர ணஞ்சரணம், பங்கத்துமைவாழ்பவனேசரணம்பங்கத்தெமை நீப்பவனேசரணம், வெங்கட்பணியாபரணசரணமெய்ஞ்ஞான தலத்திறைவாசரணம்.

மணமார்தருவில்வவனத்தொளிருமணியேநினதாளுறும ன்பினரோ, துணிவார்சமுசாரவலைத்திரளைத்துணியாவடியேமு நின்பத்தியினாற், பிணியார்சமுசாரநெடுந்திரைகள்பிறழும்பிற விக்கடலைகடவாத், திணியாரருள்வான்கரைசேரும்வகைசெ ய்யாய்சிவசங்கரவென்றனரால்.

இந்தப்பிரகாரம் இருடியரொழுபதின்மரும், ஆணவவலியி னைக்கெடுத்துப் பொருள்களுளுயர்ந்தபொருளாகிய பெருமான் திருவடிநீழல் புகுமாறு உருகியவன்போடு துதிசெய, அவர்க ளது மனவுண்மையையறிந்த உமைபாகர் அவர்கட்குத் திரு வருளுபதேசிக்கத் திருவுளமாயினர். அடர்ந்த சிறைகளையு டைய அன்னமானது ஆகாயத்தில் தடைப்பட அதனால் பிர மன் இப்பூவாளூருக்கு மேவி அவ்விடத்தில் வழிப்பட்டுக் கொண்டிருந்த இருடியரோடுகலந்து வேள்விடை முடித்தலும் அவர்கட்குச் சிவபெருமான் மான்மழுசதுர்புஜ காளகண்ட திரிநேத்திரராய்க் காட்சிகொடுத்தசரித்திர மீது இனிமேல்

அவர்கள் பெருமானிடத்து ஞானம்பெறும்விதமுணர்ந்துவன் உணர்மினெனச் சூதர் உரைசெய்ய வாரம்பித்தனா.

பிரமன்வரவுச்சருக்கமுற்றிற்று.

ஞானவுபதேசச்சருக்கம்.

மாதவர்களாகிய வெழுபது முனிவாகளுககுச் சிவபெருமான் மேன்மைதங்கிய பரஞானத்தை யருளுதறகு விரும்பினதை, அப்பெருமானது திருவடியன்றி வேறுபற்றில்லாவிரணடாவது சம்புவாகிய நநதியெம்பெருமான் தனது திருவுளத்திற்றெரிநது அவ்விடத்துப் பக்கங்களில்சூழ்நது நெருங்கியிருககும் பூதநாதாகளேயும், தேவாகளேயும், மற்றெவரையும், உடையவன் திருவுளக்குறிப்பின்படி விலககிவிட்டனா. இருவினையொப்புவாயந்து நிற்கு மெழுபது முனிவர்கட்குஞ் சஙகரன் தனது திருக்கண்களால் தீட்சித்து அஸ்தமஸதகஞ்செய்து அவர்கள் சிரசில் திருவடிகளேச் சூட்டியருளினா. அஙஙனமாகத திருவருள் உதிப்பித்தலு மவர்கள் திகைப்பு நீஙகிநிற்க, விளங்கக்காணப்படுவதுங் காணப்படாததுமல்லவாய், ஒருகுணங்களு மோரடையாளங்களு மில்லையாய், மலரகிதமாய், ஒன்றுயிருப்பதாய், அழியாததாய், எண்ணிறந்த வான்மாககளுக்குமறிவாய், சலிப்பற்றதாய், கண்டிக்கப்படாததாய்,இன்பசொரூபமாய், மாறுபட்டவர்கள் சென்று கூடுவதற்கரிதாய், வழிப்பட்டவாகள்சென்று பொருந்துகைககு இடமாகியமுத்திநெறியாய், அணுவுக்கணுவாய் மகத்துக்குமகத்தாய்த் திகழ்கினற சிவமாகிய தன்னேயும்; இலக்கததினுளவுபடுத்தற்கரிதாய், அஞ்ஞானமாகிய ஆணவமலத்தினுலே மறைப்புண்டு

கிடந்து, அவரவர்கட்குண்டான புண்ணியபாவங்கட் கீடான தோரா உடலகளைப் பெருமான காருண்ணியததினாலே பொரு நதிப் பிரிவற்றுநின்று, அவவுடம்போடு கூடுகையினல் எண் ணிறநத போகஙகளைப்புசிதது அநதப்புசிப்பா லுணடாகிய இதாகிதங்களினாலே மீளவும புண்ணியபாவஙகளை யார்ச்சித துககொணடதனால இறந்து பிறநது வருவதாய் அங்ஙனம் வருகையில அநாதியே யான்மாவை மறைககப்பட்ட ஆணவ மலமானது பரிபவமவநத வவதரததுச் சிவனுடைய வருளி னாலே ஞானமுணடாகி மறைப்புநீஙகித்திருவடியிலே பொரு நதியிடும் ஆன்மாககளின் தன்மையையும, எண்ணிறநத வான் மாக்களோடுஙகூடி நின்று மறைததுங தாஞென்றுயிருப்ப தாய், ஆனமாககளுடைய பககுவாபக்குவங்கட்குத தககதாக அவரவரிடஙகளிலே மறைந்து நின்று அநத வான்மபோதங களின மீட்சியிலே நீஙகுவதாயிருககிற தன்காரியமான வெ ண்ணிறநத சததிகளையுடையதாய், செறிநத விருளும் வெளி யென்னும்படி நின்று ஆன்மாககளுக்கே மறைப்புகள் செய் வதாய், செமபினுட்கூடியிருககப்பட்டகாளிதமானது அந்தச் செம்புள்ளவன்றே யதனை மறைத்து உள்ளும்புறம்புங்கலந்து வெட்டுவாய்தோறு நின்றுற்போல ஆன்மபோததோடுங்கல நது மறைநது நிற்கிற அழியாத வநாதிமலமாய், ஆன்மாவின் இச்சாஞனககிரியைகளை சீவியாதபடி மறைத்து நிறகும் ஆண வமலததினியல்பினையும் அறிவீராக.

மாதவத்தீர்! நெருஙகிய அண்டங்கள் யாவுங்காரியப்படு வதற்குமுதற்காரணமாக விருககு மாயையோசடம். ஆன்மாக் களோ ஆணவம், கன்மம், மாயையென்கிற மும்மலஙகளால் மாறுபட்டு, சாக்கிரம், சொப்பனம், சுழுததிமுதலியவவஸ்தை

களையுறுவர் ஆகையால் நாமே அவைகளைப் படைப்போம் சிவன், உருத்திரன், சச்சிதானந்தன், தேவேசன், பவன், பரா பரன், நிற்குணன், நின்மலன், பழையோன், நவையறுப்போன் என்று வேதங்களால் பிரதிபாதிக்கப்பட்டவனெவனோ அவனே நாமெனவறிவீராக; அண்டமெல்லா மணுவென்னும்படி பெரிதாகியும் அணுவே யண்டமென்னும்படி சிறியதாகியும் சர்வ வியாபகமாய் நிறைந்து சொல்லுதற்கருமையாயிருக்கும் அருவினாலல்லது அடைவதற்கரியனென்னுமியல்பினையுடையநம்மை யாருமறியார்கள் நும்போன்றோர்செய்கின்ற தவங்களுக்கிரங்கியருள இத்தகைய தடத்த திருவுருவெடுத்தனம எம்மையறிந்தவா எமது சிறப்புருவினையு மறிவர். அறிவில் மயக்கமுடையவர் இத்திருவுருவினையு மாராய்ந்தறியார்கள். பரிசுத்தம்பொருந்திய யோகமும், போகமும், மோட்சவீடும், வேதாகமங்களும், பிரமன்முதல் பிபீலிகைபரியந்தமுற்ற ஆன்மகோடிகட்குநடக்குஞ்சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமுதலிய பஞ்சகிருத்தியங்களு மற்றையவும், நாம் திருவுருக்கொண்டால் உளவாம். கொள்ளாவிடி லிலையாம. இருண்ட ஆணவமலத்தினின்று நீங்கிய தெமதுருவம் முனிவரீர்! தெருண்டேபாரீன் மாயையைக்கடந்த நாம் அசுத்த மாயையால் நடிக்கப்படும் ஆன்மாவாக வொருகாலத்தும் பொருந்தோம். மாயையாலாகிய காரியவுருவெல்லா மொருகாலத்து நிலையின்றியழியும், எம்முருவ மொருகாலத்து மாயாது. பிரம விஷ்ணுவாதிதேவர்கள் அசுத்தமாயையில் தனுகரணபுவன போகங்கள் வாய்ந்தோர். அழியுந்தன்மையர் அவர்கள் ஒருக்காலும்பதியாகார். பிரமனும், விண்டுவும்போந்த சென்மங்களில் மகத்தாகிய தவங்களைச்செய்து சிருட்டித் தொழிலினையுந் திதிதொழிலினையு முறையே பெற்றனர்.

இவ்விரண்டு தொழிலுஞ் சங்காரகர்த்தனாகிய நம்மையன்றி யவர்கட்குப்பொருந்தாது ஆன்மாக்கள் எண்ணிறந்தன, அவை யாணவத்தால் கட்டுப்பட்டன. பலகன்மங்களை யுடையன, மாயாசரீரத்தன. அநாதிமுத்தசித்துருவனாயிருப்பவனரனெனு நாமே, அநாதிபெத்த முத்தசித்துருவாயிருப்பன வான்ம வர்க்கம். அநாதிமுத்தனாகிய வெமதருளினால் அநாதிபெத் தர்கட்குள்ள அநாதி பந்தநீங்கி யனுபந்தமுமடுக்கும். பளிங்கு போன்று ஆன்மாவானது சார்ந்தவண்ணமா யிருத்தலினலு குற்றங்களினின்று நீங்க நாம் செறித்திட்ட மாயை கரும மிரண்டினையுங்கூடிப் பிராரத்துவத்தினை யனுபவித்து இறப்பு பிறப்புகளில் பொருந்திவரும். மறைப்பினைசெய்யுமாணவத் திலழுந்திய ஆன்மா கலையாதித்தத்துவங்களால் பரஞானமுற் றுக்கருமங்களைநடத்தி நானெனதென்று சகல கேவலப்பட்டு வேவ்வேறுருவடைந்து சொர்க்க நரகாதிகளில் சுழலும், மூல வாணவத்தி னான்மா சுழலுமளவு மாயையுங் கன்மமு மயக்கும் இம்மாயை சுத்தமசுத்தமென விரண்டாய்த் தனுகரண புவன போகமென நான்காகச்சாரும்.

சுத்தமாயையானது மலகன்மங்களோடு விரவாது சுத்த காரியப்பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது. இம்மாயை யின கீழடங்கி மலகன்மங்களோடுவிரவிச் சுத்தாசுத்தக்காரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமா யிருப்பது அசுத்தமாயை. கருமமென்பது ஆன்மாக்க ளெடுக்கப்பட்ட உடம்புகளுக்கு முன்னிலைக்காரணமாய, பலவிதமான புசிப்புக்களை யுண்டாக் குவதாய், பலபேதங்களா யிருப்பதாய், ஆன்மாக்கடோறுஞ் சென்று பொருந்துவதாய், மனத்தினாலும் வாக்கினாலுங் காய த்தினாலுஞ் செய்யப்படு மியல்பினையுடையதாய, புத்தியிலே நிற்பதாய, இருவினையான புண்ணிய பாவங்களாய, சங்கார

காலதது மாயாகாரணததிற் சென்று பொருநதுவதாய் நல்ல சாதி, தீயசாதி, தீரககாயுள், அறபவாயுள, நல்லபோகம பொலலாப்போகம் என மூன்றுவிதமாயிருப்பது. இஙஙனமூன்று மோரான்மாவிலே யநாதியே கூடியுள்ளனவாம். இப்புசிப்பு ஊழ்வினையாலல்லது உணடாகாது அது முன்பாாசசிதத வொழுஙகிலேயும் *வன்மை மென்மைகளுக கீடாயும்வரும. சூககுமகன்மம, அதிசூககுமகன்மம், தூலகனமமெனமூன்றும். அவை முறையே சஞ்சிதம பிராரததுவம் ஆகாமியமுமாம்.

சஞ்சிதமாவது அநாதிதொடுத்துச சனனந்தோறு மாாச்சிததவினை புசிதது மிஞ்சியது ஆறததுவாவிலேயுங கட்டுப் பட்டிருப்பது. பயிா விளைவுஞ்ஞெருவன தன்முயறசியால விளைநத தானியததைச் சோப்பிததிருக்கும் களஞ்சியமபோலும்.

பிராரததுவமாவது சஞ்சிததததிலே சிறிது புசிககப்பட்ட வினை யொருசரீரததை யெடுப்பிததுச சாதி, ஆயுள், போகம் கொடுககும். களஞ்சியத்திலிருநது தானியததை யெடுத்தனுப வித்து வருவதுபோலும்.

ஆகாமியமாவது பிராரததுவம்புசிக்கையில் வநதேறுகிற புண்ணியபாவங்கள். அவையாவன மனோவாக்குக் காயஙகளினற செய்யப்படு நற்றொழிலுந் தீததொழிலுமாம். களஞ்சியததினினறு மெடுத்தனுபவித்து வருஙகால் மறுபடியுங களஞ்சியங குறையாவணணம் விளைத்துப பூாத்திப் பண்ணிக கொளவதுபோலும்.

---

*ஒருவன் பனைவிததை மணணிலேநட்டான, பின்பு தெஙகுவைததான், பின்பு கத்திரிநட்டான், பின்பு கீரை விதைததான், கீரை பதினைந்துநாளையிலேயும், கததிரி யொரு மாததிலேயும், தெங் கைந்து வருடததிலேயும், பனை முப் பதுவருடததிலேயும் பலன்கொடுப்பதுபோலாம்.

இந்தப்பிரகாரமாகத் தேகத்தால் பலகன்மங்களைச் சமபாதித்தும, கனமத்தாற் பலதேகங்களைச் சம்பாதித்துங் கலங்குவதல்லாமல திருவாகிய மெய்த்தருளினைச்சேர்ந்து பேரின்பத்தினை மருவவறியாது மும்மலத்தினையடையும் உயிர்கள். அம்மலத்து உயிர்கட்கு இரங்கி அநாதிசிருட்டியில் நாமே இவ்வுலகமுழுவதிலு மிகுந்த சிறப்போடுங்கூடிய தலம், தீர்த்தம, மூர்த்தி யென்னத் திருவுருக்கொண்டு அவரவர்கள் துன்பங்களைத்தீர்த்து நல்வழியருளும சிவதருமங்கள் அபுத்தியினுலும் புத்தியினுலு மலிவித்துச் சரியைமுதலியொட்டானு மும்மலங்களை நீக்குவோம.

"புறத்தொழின் மாத்திரையானே நமது உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியை எனப்படும். இது சரியையிற்சரியை, சரியையிற்கிரியை, சரியையில் யோகம், சரியையில்ஞானம் என நால்வகைப்படும.

பீஜமந்திரங்கூட்டாத மந்திராசமனம, விபூதிதாரணம், கரநியாசம், மார்ச்சனம், அகமருடணம், தாப்பணம முதலியவைகளை உணர்த்துவது **சரியையிற்சரியை.**

திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், வில்வம் பாதிரி கோங்கு வன்னி கொன்றை புலிநகக்கொன்றை பொன்னுவிரை மந்தாரை சண்பகம செருந்தி நெல்லி செவ்வந்தி நந்தியாவர்த்தம் மல்லிகை குடமல்லிகை தும்பை சிவகரந்தை மாசிப்பச்சை திருநீற்றுப்பச்சை செந்தாமரை வெண்டாமரை என்னு மரஞ் செடி கொடி முதலியவைகளில் உள்ளபத்திர புட்பங்களை எடுத்தல் அவைகளினுலே மாலை தொடுத்தல், சுகந்ததூபமிடுதல், திருவிளக்கேற்றல், தோத்திரம்பாடல், ஆனந்தக்கூத்தாடல், பூசைத்திரவியங் கொடுத்தல் முதலியவைகளை உணர்த்துவது **சரியையிற்கிரியை.**

திருக்கோயிற் றிருத்தொண்டு செய்யுமிடத்துச சதாசிவ மூர்த்தியுடைய திருமேனியை ஆசாரசத்தி முதல் சுத்தமாயை ஈறாயுள்ள அங்கித் தம்பவடிவமாகத தியானித்து, ஓர்கால் பாதாளததினும், ஓர்காற் பூமியினும, ஓர்கால் ஆகாயததினும், பிரதக்ஷணம் வருவதாகத் தியானிததல முதலியவைகளை உணர்த்துவது சரியையில்யோகம்.

மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளை வாயிலாகவுடைய ஐந்தாசைகளை அடக்குதல், மெய்யன்பு, தியானம், தவம், உண்மை, சிவாலயததையுஞ் சிவனடியாரையுஞ் சிவனெனககாணடல்முதலியவைகளை உணர்வது சரியையில் ஞானம்.

புறததொழின் அகததொழின் மாததிரையானே எனது அருவுருவத் திருமேனியை நோக்கிச செயயும் வழிபாடு கிரியை எனப்படும். அது கிரியையிறசரியை, கிரியையிற கிரியை, கிரியையில் யோகம, கிரியையிலஞானம் என நால் வகைப்படும்.

பீஜமநதிரத்தோடு கூடிய மந்திராசமனம், விபூதிதாரணம், அக்கினிகாரியம், அங்கநியாச கரநியாசம், மார்ச்சனம், அகமருடணம், சிவகாயத்திரி பஞ்சாக்ஷரசெபம், உருத்திராக்ஷதாரணம் என்பவைகளை உணர்த்துவது கிரியையிற்சரியை.

புஷ்பம் திருமஞ்சன முதலிய உபகரணங்கள்கொண்டு ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுததி, இலிங்க சுத்தி, என்னும் பஞ்சசுத்திகளுஞ் செய்து, சிவலிங்கததின் பீடத்திலே சத்தியாதி சததிபரியந்த பதுமமாகிய சிவாசனம பூசித்து, அதன்மேல் இலிங்கததிலே *வித்தியாதேகமாகிய

*விததியாதேகமாவது பஞசகிருததிய உபயோகிகளாகிய ஈசானமுதலிய பஞ்சமந்திரஙகளினாலே சிரமுதலாகக்கற்பிககப்படும் சத்திசரீரமேயாம.

மூர்த்தியைநியாசஞ்செய்து, அவவித்தியாதேகத்துக்குச் சிவனை யுள்ள நிஷ்களரூபரும சருவகர்த்தாவுஞ் சருவவியாபகருமாகும் பரசிவனாகிய மூர்த்திமானைத் துவாதசாந்தத்தின்மேலே தியா னித்து னே நியாசஞ்செய்த வித்தியாதேகத்திலே ஆவா கித்து, "சுவாமீ சருவஜகத்துக்கும் நாதரே, பூசையின்முடிவு எதுவரையுமோ அதுவரையும் நீர் பிரீதியுடன் இவ்விலிங்கத் திலே சாந்நித்தியராயிரும" என்று விண்ணப்பஞ் செய்து பூசித்து ஸ்தோத்திரம் பிரதக்ஷிண நமஸ்காரம்பண்ணி முடித் தலையுணர்த்துஞ் சிவபூஜை கிரியையிற்கிரியை.

மேதாகலைமுதல் உன்மனைகலை ஈறாயுள்ள சோடசகலைக ளுள்ளே, மேதாகலை, அர்க்கீசகலை, விடகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை, நிரோதிகலை, நாதகலை, நாதாந்தகலை, சத்தி கலை, வியாபினிகலை, வியோமரூபினிகலை, அநந்தைகலை, அநாதைகலை, அநாசிருதைகலை, சமனைகலை, என்னும் கலைக ளிலே தனித்தனி அமைந்து கிடந்த தத்துவம் முதலியவை களை எல்லாம இருதய முதல் சமனாந்தம் வரையும சோபான முறையாய அவ்வக்கால மாத்திரையினுள்ளே கடந்துகடந்து சென்று, பஞ்சாக்கரத்தின் நாமாக்களிலே வைத்து, சமனாந் தே பாசசாலம் என்றறிந்து அவற்றைக் கழித்துவிட்டு, உன் மனாந்தே, பரசிவமெனக்கொண்டு சிவத்தைத் தியானித்து, பின்பு தியானிப்போனாகிய தானும தியானமுந் தோன்றாது, தியானப் பொருளாகிய சிவமொன்றே விளங்கப்பெறுவது கிரியையில்யோகம்.

நாபியினடியைச்சார்ந்த கிழங்கே பிருதிவி தத்துவமாக வும், கிழங்குக்குமேலுள்ள எண்விரல் அங்குல அளவாயுள்ள நாளமே அப்புமுதலிய இருபத்துமூன்று தத்துவங்களாகவும், நாளத்துமுட்களே அமரேசன் முதல் சிகேதன் ஈறாயுள்ள

எழுபத்திரண்டு புவனங்களாகவும், நாளத்து நுனியிலும் பூவி னடியிலும் பொருந்திய முடிசசு மாயை யாகவும, பன்னிரண் டஙகுல விரிவினை யுடையனவாயுள்ள எட்டு இதழ்கள வித்தி யாததது வங்கள் எழும் சுத்த வித்தை என்னும ஒனறுங்கூடிய எட்டுதததுவமாகவும், அறுபததுநான்கு எனப்படும கேசர வடிவம ஈசுரம் சதாசிவம என்னும இரண்டு தததுவமாகவும், அக்கேசரஙகளுக்குள் உள்ளதும ஒரங்குல உயரததினதுமாகிய பொகுட்டு வடிவம சததிதததுவமாகவும, அப்பொகுட்டிற் காணப்படும் ஐமபததொரு பீஜவடிவஞ சிவதததுவமாகவுஞ கற்பிககப்பட்ட இருதயபங்கயததை ஆசனமாககி அதிலே சசி நியாதி அட்டததிரிம் சதகலாரூபமாகக கற்பிககப்பட்ட சிவ லிஙகப்பெருமானைக் கொல்லாமை, ஐமபொறியடக்கல, பொ றை, அருள, அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்ட புட்பஙகொணடு திருவைநதெழுததால அருசசனைசெய்வதை உணாததுவது கிரியையில்ஞானம்.

அகததொழின் மாத்திரையானே என்னுடைய அருவத திருமேனியை நோக்கிச செய்யும வழிபாடு, யோகமெனப் படும். அது யோகத்திற்சரியை, யோகததிற்கிரியை, யோகத தில் யோகம், யோகததில ஞானம் என நால்வகைப்படும.

விபூதி உததூளனம், பிரணவததினுல ரேசக பூரக கும்ப கஞ்செய்தல், கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர்மனை வியனையும் பொதுமகளிரையும, விரும்பாமையாகிய ஆண்ட கைமை, இரககம், வஞ்சனை யில்லாமை, பொறையுடைமை, மனங்கலஙகாமை, அற்பாகாரம சுசியுடைமை என்னும் இய மம, தவம் மனமுவந்திருத்தல, கடவுளுண்டென்னும் விசுவா சம, பாவததுககுப்பயநது தேடியபொருளைச் சறபாததிரமா

யுள்ளவருக்குக் கொடுத்தல், தன்னின மூத்தோரைவழிபடுதல், உயிர்க்குறுதிபயக்கும் உண்மை நூல்களைக் கேட்டல், குலம், செல்வம் அதிகாரம் முதலியவைகளினாலே கொவமின்றி யடங்கி யொழுகுதல், தக்கனவுந் தகாதனவும் பகுத்தறிதல், செபம் விரதம் என்னு நியமம், முதலியவைகளை உணர்த்துவது **யோகத்திற்சரியை.**

பதினாறுமாத்திரையளவுக்கு வாயுவைப்பூரித்து, அறுபத்திநாலுமாத்திரையளவுக்குக் கும்பித்து, முப்பத்திரண்டு மாத்திரை யளவுக்கு ரேசித்தல், பிரணவத்தை உச்சரித்துவாயுவை உள்வாங்குதல், இருபத்தொராயிரத்தறுநூறு வாயுக்களைத் தினவழியிலே குறைத்தல் இரண்டுநாசியினாலும் வாயுவைப் பல்காலுள்வாங்குதல், புருவமத்தியிலே தியானித்தல், வாயுவைக் கபாலத்தினின்றுந் தோன்றி ஒடுங்கினதாகத் தியானித்தல்; வாயுவையடக்கிக் கன்னமூலத்தால விடுதல, உடம்பை பூரிப்பித்தல், வாயுவை எப்போதும மேனோக்கிச் செலுத்துதல், சித்திரநாடி வசசிரநாடி சுழுமுனநாடிகளிலே வாயுவைச்செலுத்துதல், உபதத்தால் வாயுவை ஏறறல், பிரமாந்திரந் திறப்பித்தல், பிரசாதவழியிலே வாயுவைச் செலுத்துதல், நீர் உதிரம் முதலிய தாதுக்களை அடக்குதல் முதலியவைகளை உணர்த்துவது **யோகத்திற்கிரியை.**

உச்சுவாசம் நிசசுவாசம் இரண்டையும் அடக்கி, சுழுமுனைமாகாகத்திலே பிராணவாயுவை நிறுத்தி, விஷயங்களின் வழி மனதைச செல்லவொட்டாமல் திருப்பி, ஒருகுறிப்பிலே நிறுத்தி, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்னு மாறுதாரங்களின் அந்தர்மாதிருகாக்கிரமத்தை அறிந்து, அவ்வவ்வாதாரங்களின் அதிதேவதை

களைத் தியானித்து, அவ்வாறுதாரங்களினும அசபாசத்தி ஒவான்மிகையாய் நிறகும் முறைமையைப்பார்தது, மூலாதாரந்தொடங்கி விநாயகா முதலாகிய தேவதைகளைப் பொருந்தி, அபிமுகம் பண்ணிக்கொண்டு ஆறுதாரத்துககு மேலாகிய பிரமரந்திரமளவும் அசபையுடன்சென்றணைந்து, அந்தப் பிரமரந்திரத்திலே அதோமுகமாய்ச் சகஸ்ரதளமாயிருககிற தாமரைமுகையைச் சோதிசோதி பதோச்சாரணததாலே உதிக்குஞ் சிவார்க்கனுலே அலரச்செய்து, அநதத்தாமரைப்பூவின் கேசராக்கிரத்திலே உள்ள சந்திரமண்டலத்தை ஆகுஞ்சனஞ் செய்தலினுலே மூலாக்கினியை அக்கினிபீசாக்கர உச்சாரணத்தினுலே எழுப்பி, நாடிச்சக்கரததைப்பேதித்து, அவ்வக்கினியினுலே சந்திரமண்டலததை இளகப்பண்ணி, அநத அமிாததைச சர்வநாடிவழியாக நிரப்பி அவ்விடததிலுணடாகிய சுகோதயத்தில் அந்தமயமான ஞானமிர்தாவததையை அடைந்து நின்று, சோமசூரியாக்கினிப்பிரகாசாதிகளாகிய பிரத்தியேகப் பிரகாசங்களெல்லாஞ் சூரியோதயத்திலே நட்சததிராதிப் பிரகாசங்கள் அடங்கினுற்போலத் தன்னிடததடங்கச் சாவதோமுகமாய்ச் சுவயப்பரப்பிரகாசமாய் இருக்கின்ற பூரணப்பிரகாசததைப் பாவிப்பதை யுணர்ததுவது **யோகத்தில்யோகம்.**

பிருதிவியைத் தியானித்து வச்சிரகாயம்பெறுதல்; சலத்தைத்தியானித்து வாயுபவனங்களை ஒடுககி நீரிலே நடத்தல நிற்றல் கிடத்தல் செய்தல், தீயைச்தியானித்துக் கபாலத்தை வெடிக்கச்செய்தல், சரீரத்தை வெந்த புரிபோலாக்கல, தீயிலே நிற்றல் இருத்தல் கிடத்தல் செய்தல்; வாயுவைத்தியானித்து, காயத்தோடு ஆகாயததிலே பறத்தல் பரகாயப்பிரவேசஞ் செய்தல், ஆகாயததைத தியானித்துச சரீரம் உயிா

அறிவு முதலியவைகளைச் சூனியமாக்கி அணிமா மகிமா முதலிய சித்திகளைப் பெறுதல். புருவமத்தியிலே கண்ணொளி மின்னொளி விந்துவொளி உள்ளொளி முதலியவைகளைத் தியானித்தல், விந்து நாதங்களைத் தியானித்து ஒடுங்கியவிடத்துக கடல் மணி முதலியவைகளின் தொனியைக்கேட்குதல்; என்பவைகளை உணர்த்துவது **யோகத்தில் ஞானம்.**

புறத்தொழில் அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத்தொழின் மாத்திரையானே உருவம் அருவுருவம் அருவம் என்னு மூத்திறத்திருமேனிகடந்த அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பாய் நிறைந்துநின்ற என்னிடத்துச் செயயும் வழிபாடு ஞானமெனப்படும். ஞானம் ஞானத்திற்சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத்தில்யோகம், ஞானத்தில் ஞானம் என நால்வகைப்படும்.

எவர்களாலும் அறிதற்கரிய சிவபெருமான் நம்பொருட்டுன்றே திருமேனி கொண்டெழுந்தருளினு ரென்றறிந்து, வேடத்தானும், சிவோகம்பாவனையானும், பிராசாதயோகஞ் செய்தலானும், சிவத்தோடு இரண்டறக்கலந்து நிற்கும் தன்மையானும், திருவேடமுடைய மெய்யடியாரையுஞ் சிவலிங்கப்பெருமானையும், கண்களிலேநின்று ஆனந்தபாஷ்பம் பொழிய, மொழிகுழற, உண்மையுணர்ந்து, வழிபடுதலையுணர்த்துவது **ஞானத்திற்சரியை.**

பிருதிவியாதி தத்துவங்களைச சடமெனக்காண்டலாகிய பூதசுத்தியும், திருவருளானன்றி அங்ஙனம் ஆன்மா அறியாதெனக் காண்டலாகிய ஆன்மசுத்தியும், கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றன வெல்லாந் திருவருளெனக காணடலாகிய திரவிய

சுத்தியும, திருவைநதெழுத்தைச் சிவமுன்ஞகக கணிததலா கிய மநதிரசுததியும், யாண்டும் நீககமற வியாபிதது நிறகுஞ சிவபெருமான இவ்விலிங்கத்தினும உளா எனககாணடலாகிய லிங்கசுததியுமாக ஐநது சுததியுஞ செயது வழிபடுதலே உணாததுவது ஞானத்திற்கிரியை.

யான் எனதென்னுஞ செருக்கற்றுச் சிவனுடைய ஆன் மாநிற்றலையும், அதுபறறி வினை நுகாசசிப்பும் ஆசசிப்பும் ஆன்மாவுக்கிலலையாதலையும், அதுபறறிக குறறமகலுதலையும் உணர்த்துவது ஞானத்தில்யோகம்.

அஞ்ஞானிகளாயினோர் மருண்மேலீட்டினுலே சிவம முற்றுந தோன்றப்பெறுது பிரபஞ்சவாசனையோடு நிற்கு நிலை போல, சிவஞானிகளாயினோ அருணமேலீட்டினுலே பிரபஞ சவாசனை முற்றுந தோன்றப்பெறுது நமமோடு அதததுவித மாய் நிற்குநிலையை உணர்ததுவது ஞானத்தில் ஞானம் ''

கேவல சகலங்களைக் கீழ்ப்படுததிமேலெழுநது ஓஙகு முண்மைஞான மேவின சிலா என்னில் இரவில விழியென்ன நம்மோடு இரண்டறககலந்து சுததாததுவிதமுறுவா. சிலாநின் மலாவஸதை யைந்துற்றுவாழ்வா.தவத்தீர்! இவ்வுணமைகளை யறிமினென்று திருமூலலிங்கததுப்பெருமான் காநதருளினா.

அங்கு வந்திருந்த பிரமனு மறைநது தனது சததிய லோகம்போய்ச் சேர்ந்தனர். இனியகுதலையாகிய மழலை மொ ழியை வாய்நத குஙகுமசௌந்தரியோடு திருமூலநாதா தோ ன்றி யுணர்த்திய மெய்ஞ்ஞானத்தினையுணர்ந்த முனிவாகள் தேர்ந்து சிவானந்தசாகரத்தில் முழுகித்திளைதது வாழ்நதனர். பின்னர் முனிவர் தருமமே சொரூபமாகிய அபவிருதயாகத் தினை முடிததுப் பற்குனிநதியில் ஸ்நானஞ்செய்து நல்ல

நிறமவாய்நத வெணபட்டு பூண்டனர். நிசுளாபுரியென்னும் பட்டனததில்வாழும சுதவாமவேநதன அவ்விடத்திற்கெய்தி அபிருதஸநானம் அநநதியிற்செய்து முனிவரா மகிழ அநத ணர்கட்கு அபாரமான தானஞ்செயதனன். அபிருதஸ்நானம எந்நதியிறசெய்யினும் அந்நதியினீா மஙகளகரமாகக கஙகை யைககாட்டிலும் அதிகப்பயனைத தருமெனனில் பற்குனிநதி யில் அபிருதஸநானம செய்தோர்க்குண்டாகும் பலனை யிய வளவென வெடுதது சசொல்ல யாவரால் முடியும. வேள்வி யிலவிளைதத மநதிரநெருப்போடு தத்தமிருககையையடைந்து ஆகமக்கிரமபபடி அரணியிற் கடைந்தெடுககும அக்கினியிற் சோததுப் பிரதிதினம் அக்கினிகாரியஞ்செய்து திருமூல நாதா திருவடியில் தாககிய மனததையுடையவராய் முனிவ ரெலலாம் பரவெளியில முயஙகி வருகையில் சிற்சிலநாள் சென்றபினனர் நித்திரைசெய்தோர் கரததினின்று நழுவிய பொருளைப்போலத தங்கள் செயல்களையெல்லா மொழிததுப் பேரின்ப மேலீட்டினால் கலஙகாத அறிவினர்கள தஙகளிரு தயததிலெழும் ஞானககினியை யுளளததிலொடுககித துவாத சாந்த ஸ்தலமாகிய துரியாதீததில் சிவபோகத்தோடு இரண் டறக்கலநது சுததாதநுவித நிலையில் அசைவற்றிருந்தனர்.

முனிவரொழுபதின்மருக்குந் திருமூலநாதர் அருளிய மெய்ஞ்ஞான வுண்மையினை யினிதுதெளிததோம். இயற்கை யாகவே தரும சொரூபராக விளஙகும் பெரியீா! குளிாச்சி பொருந்திய கற்பகசசோலையின் நீழலிலிருந்து தேவலோகத தையாளுந தேவேந்திரன் கனிந்த மனததினனாய்ச சிவபெரு மானை யருசசனைசெய்தவிததததைக் கேண்மினெனப் பௌரா ணிகா பகரலுற்றனா.

ஞானவுபதேசசசருக்கமுற்றிற்று.

இந்திரனருச்சனைச சருக்கம்

அரிய தவசொரூபியாகிய பிருகுமுனியானவர் காதலோடு பெற்றெடுத்த வழகிய மாதவனாகிய சிவனனென்னு முனிவா இமயமலைச்சாரலையடுத்த வொருகானத்திற் பெரிய தவததினைச் செய்துகொண்டிருக்கையில் அவரது புண்ணிய ரூபமாகிய வுடம்பெல்லாம் புற்றுமூடியது. பிரகாசமபொருநதிய நிறததினைவாய்நத தளிர், மலர், காய், கனி பலநிறைநத விருட்சஙகளும், கொடிகளு மவனைசசூழ்நதன. இந்நிலையில சிவனனென்பவர், அவ்விடததமருங்காலததில் தனககு நிகரிலலாத சையாதியென்னும் பெயரைவாய்ந்த வொரு மன்னவன் தவத்தாலபெற்றெடுத்த மிக்க வழகினைவாய்ந்த சுகன்னியென்பவள் ஒருநாள பற்பலபாங்கிகள் தன்னைச்சூழ்ந்துவரப் பட்டணத்தின் புறம்போந்து சிவனனென்னு முனிவரிருககும் வனத்தினிலவந்து புட்பம் பறிததுககொண்டிருக்கையில் மூலலையாலும் இருவாட்சியாலுஞ் சூழப்பெற்ற வொருபுற்றினைக்கண்டு சமீபிதது இதற்கு ளெனனவிருககிறதென்று ஒரு சிறு துவாரததின்வழியே பாாத்தனள் அவ்வாறு பார்த்த துவாரத்தில் தவம் புரிநதுகொணடிருககுஞ் சிவனமுனியின கண்ணானது பிரகாசித்துக்கொண்டிருத்தலு மதனைச் சுகன்னியென்பவள பொன்வண்டென நினைத்து ஒரு துரும்பினலை சுறறிதடோண்டினுள். அப்படித்தோண்டிய மாத்திரதது யோகஞ்செய்துகொண்டிருந்த முனிவரிங்ஙனஞ் செய்பவரியாவரென வுற்று நோக்குகையில் அழகுவாய்ந்த இரதிதேவியுமொப்பல்லவென்னும்படி மிகுந்த தேசசோடுங்கூடிய சுகன்னியைக கணடனா. உடனே அணைகடந்துபாய்ந்த சல

மென்ன அமமுனிவரது மனமுடைந்து குளிர்ச்சிவாய்ந்த கிரணங்களோடுங்கூடிய மூன்றாம்பிறைச் சந்திரனையொத்த நெற்றியினைவாய்ந்த சுகன்னியின்மீது விருப்பமூண்டுகொண்டது. மன்மதனு முடனே தனது புட்பபாணங்களை முனிவர்மீது தூண்டிவிட்டனன். குற்றமற்ற யோகத்தினின்று மனம் வேறுபட்டுப் பிழைப்பட்டதைச் சற்று மெண்ணாதவராகி அம்மாதினிடத்து நெஞ்சைச்செலுத்திப் பிழைப்பட்டனரெனில காமநோய் யாவரால் வெல்லற்பாலது, தேகம்வற்றியவராய், உணவு நீங்கினவராய், யோகத்தையுடையவராய் வாழ்ந்த மாதவனாகிய முனிவரே காமநோ யுற்றனரெனில் எவர் காமசாகரத்தில் மூழ்காதவா. முனிவீர்காள்! மன்மதனது சரங்கள் பாய்ந்தமாத்திரத்து மையலால் மயங்கிய சிவனென்பவர் வீரம்பொருந்திய வேலாயுதத்தையொத்த வாள்போன்ற கண்களையுடையவளாய்ப் பிரகாசிக்கின்ற ஆபரணங்களாலலங்கரிக்கப்பட்டிருக்கிற சுகன்னியின் கரத்தைப் புற்றுனது பிளவுபட்டுக் கீழேவிழும்படி தனது கரத்தை நீட்டிப் பிடித்துக்கொண்டனா. சுகன்னியென்பவள்பயந்து, வளையலையணிந்த கரத்தைப் பிடுங்கிக்கொண்டு, மாலையுங்கூந்தலுஞ் சோர்ந்துவிழ, நெற்றியினிடத்து வியாவைவிட, அரையிலுள்ள மேகலையினின்று மணிகள்சிந்த, இரண்டுகாற் சிலம்புகளு மொலிக்கவோடித் தனது பாங்கிமார்கள் கூட்டத்திற்போய் விழுந்தனள். நடுங்கியவுடம்பினையும், வரண்ட நாவினையும், இமைகள் குவிந்துமூடிய விழிகளினையும், அடிக்கடிவிடும்பெருமூச்சினையும், துடிக்கு நெஞ்சினையும் பாங்கிமார்கள்கண்டு இவளமிகப் பயந்தாளென்று அதிசீக்கிரமாகக்கூடி மார்பின்மீது சாத்தி, தடவி, வஸ்திரத்தால் வியர்வை துடைத்து, மேகத்தைப் போற்பரவிய கூந்தலினைமுடித்து, சோர்ந்த குளிர்ச்சிபொருந்

திய முகத்தினுக்குக் காற்றுவரும்படி விசிறிகொண்டு மெள்ள விசுறுதலுங் கண்ணைத்திறந்து பார்த்துக்கொண் டிருந்தனள்.

சுகன்னி யிந்தப்பிரகார மிருக்கையில் இவள் தந்தை யாகிய சையாதியெனு மரசன் தனது மனைவியர்கள் நாலாயி ரம்பெயர்த் தன்னைசூழப் பூந்தோட்டம்போன்று சிறந்து விள ங்கு அவ்வனத்தில் விநோத வேடிக்கையாகப் பெருஞ்சந்தோ ஷத்தோடு பிடரிமயிர்வாய்ந்த குதிரையின்மீது ஏறிக்கொ ண்டுவந்தனன். அதிகவேகத்தோடு செல்லும் அக்குதிரையி னின்று மிழிந்து வனத்துளேகிச் சிவனமுனிவர்வாழும் புற்றெதிரே தோன்றுதலுந் திவ்வியந் திவ்வியமெனவோடி அதிக வன்போடிறைஞ்சி யெழுந்து முனிவரது திருமுகத்தினைத் தரிசித்துக் கண்களினின்றும் வடியுநீரினைக்கண்டு இவருக்கிங் ஙனஞ்செய்தா ரியாவரென்று சுற்றிப்பார்த்தனன். தனதுமக ளும் பாங்கியரு மொருங்குகூடியிருந்த கூட்டத்தைப்பார்த்து, சகித்தற்கரிய துன்பத்தினை இம்முனிக்குச்செய்தவர் இவர் களேயென்று மனத்தில் நினைத்து, காற்றினு மதிக விசையா கச்சென் றவர்களையடுத்து, ஒவ்வொருவரையுந் தனித்தனி யழைத்து, இத்தகைய துன்பம் இம்முனிவருக்குச் செய்தவர் யாரென்று விசாரிக்க, பாங்கியர்கள் ஒவ்வொருவரு மறியே மறியேமென்று சொல்லிப்போக, வில்லினையொத்த புருவத் தினைவாய்ந்த சுகன்னி அதி சீக்கிரம்வந்து அடிபணிந்து எழு ந்து சொல்லுவாளாயினள். தந்தையே! செலலுகள் குடி கொண்ட நீண்ட புற்றினது ஒரு சிறுதுவாரத்தின் வழியே முனிவரது செவ்விய கண் தோன்றலும், அது பொன்வண் டென நினைத்து ஒருதுரும்புகொண்டு சுலவிததோண்டினேன் அங்ஙன மறியாமையால் தோண்டிய வென்கரத்தினை அம்

முனிவர் தனதுகைகளால் பிடித்தனா. யான் திகைத்துத தள்ளி வாசனைவீசப்பெற்ற கூந்தலைவாய்ந்த எனது பாங்கியர்கூட்டத்தில் அதிசீக்கிரமாகவோடிச் சேர்ந்தேன். நன்னெறிவாய்ந்த மனுவேந்தனாகிய என்தந்தையே இது நடந்தசங்கதியென்று உரைத்தனள்.

இதனைக்கேட்ட வரசன் அந்தோ! அந்தோ!! என்செயதாய்! என்செய்தாய்!! ஆயினுமாகுக இனிநீயஞ்சேலென்று பூங்கொத்துகள்பொருந்திய மலாசூட்டிய கூந்தலையுடைய தனது புத்திரியை அவ்விடத்திலேயே நிறுததிவிட்டு முனியைச் சமீபிததுத்தொழுது எநதாய் என்மகள் அறியாமையாற்செய்த பிழையைப்பொருத்தருள வேண்டுமெனயாசிக்க, முனிவர்தனது கெடாதகவலைகளை யெல்லாம்விட்டுச்செப்புவாா. மன்னர்களுக்கு மன்னனே! நின்பெருமை பொருந்தியவுனது குமாரத்திசெய்தபிழையையான்பொறுக்கும்படிமிகவேண்டிகொண்டகன்னியை யெனக்கு விவாகஞ் செய்து தந்திடுவாய் அங்ஙனஞ் செய்யாயேல் நின்னையுஞ் சபிததிடுவேனென்று கூறியமாததிரத்து, இலைபோன்ற வேலாயுதத்தை யேந்திய அரசன் கேட்டு, நானுய்ந்தேன் தேவரீர் சொன்னசெய்தியை யின்றே முடித்திடுவேன் என்று முனிவாகளுக்குமுடிமன்னர்களுக்கும் பரிசுத்தம்பொருந்திய யோகியாகட்கும், திருமு கமனுப்பியாவரையு மழைப்பித்துக் குளிர்ச்சிபொருந்திய புட்பந்தரித்த கூந்தலினையுடைய பெண்ணை முனிவருக்கு விவாகஞ்செயதளித்தனன். மிகுந்ததவத்தினை யுடையவனென்ன முனிமன்மதனது வஞ்சனையாகிய வம்பின் கோபத்தினைத் தணிக்கும் பொருட்டுச் சுகன்னியை மணம்புரிநது வாழ்ந்துகொண்டிருந தனா.

இந்தப்பிரகாரம் சிவனனென்னு மகரிஷியின இல்லறத்திற்கு உண்மைவாய்ந்த துணையாகிச் செய்யவேண்டிய பணிகளில் தலைமையாய் வெறுக்காத தேவாமிர்தத்தினையொத்த சுகன்னி வாழ்ந்துவருகையில் அவர்களிருக்குங் குளிர்ச்சிபொருந்திய கானகத்தினிடத்து ஓர்நாள் அச்சுவினிதேவர்கள்வந்து சேர்ந்தனர். அவர்கள் அங்கொருபக்கத்தில் நின்றுகொண்டிருந்த சுகன்னியைக்கண்டு, மன்மதனின் கணைகளால்மோதுண்டு குற்றப்பட்ட மனத்தினராகி, மாவிருட்சத்தில் வாழுங் குயிலினது ஓசையினைமருட்டு மழலைமொழியினையும், தேமற்படர்ந்த தனங்களையும், பெருத்ததோள்களையுமுடைய மங்கையின்கண் முன்னின்று சொல்லுவாராயினர். மாந்தளிர்போன்ற நிறத்தினையுடைய வணங்கேவருக சகலவழகினையும் வாய்ந்த நீ காந்தருவமாதோ? அழகுமிகுந்த கின்னரமாதே? இவ்வுலகமாதோ? தெய்வப்பெண்களைக்காட்டிலு மிக்க வழகினைவாய்ந்து ஏந்திய விளைமையான தனங்களையுடையகொடியே சீக்கிரமுனைப்பாய் அழகிய குஞ்சிரிப்பினைப்பெற்ற சுந்தரியே மந்தகாசினியாகிய நீயார் வனப்புமிகுந்த வுன்னுடைய அரும்பின் மென்முலையை நோக்கிக்காமநோயுற்றுத்தளர்ந்தனம். அச்சுவினிதேவர்களாகிய நங்கள் நீக்குவதற்கருமையாகிய நோயெங்களைவிட்டு நீங்கக் கிருபைசெய்தருள வேண்டுமென்றனர். இங்ஙன மடங்காத பெருங்காமத்தாலுரைத்த அவர்கள் முகத்தைப் பாராதவளாய், சத்தியமான கற்பின்வழியளாய், தனது காற்பெருவிரலைநோக்கினவளாய்ப் புகலுவாள் தேவர்களே! நான் சையாதியரசனது மகள், சிவனனென்னுமுனிவரின் மனைவி, என்பேர் சுகன்னி, உம்மால் விரும்பப்பட்ட யான் உங்கட்குக் கிடைக்கக்கூடியவளல்லவென்றனள். வெறுத்த மொழிகளால் மறுத்துவிடவும் வெறற வுடம்பினராகி மாசுபட்ட மனத்தினரான அச்சுவினி

தேவர் சொல்லுவார். ஆரோக்கிய மடமாதே! உனது இளமை யினையும், சௌந்தரியத்தினையும், அழகிய எம்மிடத்தில் நிலை பெற நிறுத்தி மேவினலன்றே நீபெண்ணாய்ப்பிறந்ததனு லுண்டாம் பிரயோசனம். நரையெழுந்து, திரைவிழுந்து, அதிக வயோதிகமான முனிவனால் அரசன்மகளாகிய வுனக்கு ஆசை நிரம்புமோ. மலையினையொத்த தனங்களைவாய்ந்தவளே உன்னுடைய கற்பானது கெட்டுக் குறைவு அடையுமெனின் அவ்வாறுகாமைக் குபாயங்கேள்: பஞ்சபூத சம்பந்தத்தால்வந்த விநத வுடலுக்கன்றி ஆன்மாவினுக்கு முறையென்பது கிடை யாது, இதோ நமகருச் சமீபித்திருக்கிற தடத்தில் நின்னுயக னும் நாங்களிருவரு முழுகியெழுந்திருகக மூவருக்கும் உரு வானது ஒக்கப்பிரகாசிக்கும், அப்போது எங்களுருமூன்றுள் உனக்கு விருப்பமுடைய ஒருவுருவைத் தழுவிக்கொள்வா யென்றனர். சந்திரன்போன்ற நெற்றியினைவாய்ந்த சுகன்னி யொன்றும் பதிலுரையாது திரும்பி அக்கினியின்முன்மணந்த தன்னுயகனுக் கெல்லாவற்றையு முரைத்தாள். சிவனமுனிவர் கேட்டு, தாமரையினையொத்த விழியினையுடைய மடவாய் இப் போது நான் துன்பமுடைய மூப்பினை யடைந்திருக்கின் றேன் இது நீங்கி இளமையான வுருவமடைவேனுனல் மற்ற வைப் பின்னற் பார்த்துக்கொள்வோம் அதிசீக்கிரம் நீபோய் அத்தேவா சொல்லுக்கு உடன்படுவாய் என்று தன்மனைவியை முன்னே நடத்தித் தான் மெல்லப் பின்தொடாநது சென்ற னன். சுகன்னி இணங்கியதை யறிந்த தேவாகள் அவததுறை கடந்து அறத்துறையிற்படிந்து தவததுறையில் நடககும முனிவனைக்கண்டு எதிர்நோக்கிச் சநதோஷித்துச சிவபுண் ணியத்தினை விளைவிக்குந்தீர்த்தத்தில் முழுகினாகள். புட்பங கள் நெருஙகி, மணிகள் நிறைந்து, பொன்தஙகிய அத்தடக

கனையில் மூவர்களும் எழும்பி தேவர்களும் வேறுவேறுபடுதெதி க்கண்டுபிடித்தற்கரிய ஒரேவிதமான வுருவஙகளோடு காளைப் பருவமுடையவராய் விளங்கினர்கள். இவர்களைக்கண்ட சுக ன்னியென்பவள் என்னுடைய கற்பினுக்கு அழிவில்லாதிருக் குமாகுல் என்னுடைய நாயகனே எனக்கு நண்ணுகவென்று மனதில் நினைத்துச் சிவனனென்னு முனிவரனையே தழுவிக் கொண்டனள். திவ்வியமாகிய இளமையானது திகழப்பெற்ற சுந்தரத்தைவாய்ந்த சிவனனும் அரசபுத்திரியாகிய சுகன்னி யுஞ் செம்பினையொத்த தனங்களும், வலிய தோள்களும் நெருங்கப்புல்லிப் பேரின்ப மடைந்தவரைப்போல ஆனந்தம் விளையவாழ்ந்தனர்கள்.

மண்ணுலகத்தரேயாயினு மிகுந்த வறிவையுடையவர்தங கள் நிலைமையினின்று பிசகாரேல் அவர்கள்நினையாத வெல் லாமவர்கட்கு வலியவந்து கிட்டும். விண்ணுலகத்தரேயாயினு நிலைபிசகுவரேல் எண்ணிய வெண்ணமொன்று முடியாது. அச்சுவினித்தேவர்கள் அவமானமடைந்து நாணமுற்றுத் தலை சாய்க்க அவர்கள் முகத்திலுண்டாகிய வாட்டத்தினைக்கண்டு தனது மனைவியைப் புறப்படுத்திவிட்டு முனிவர்அவர்கள் முக த்தினைநோக்கிக்கூறுவார். தேவர்கள்நோயினைத்தீர்த்திடும்வை த்தியர்களாகிய வானவரே! எந்தனுக்கிளமைப்பருவத்தினை த்தந்த நும்நன்றியைமறவேன் நானிங்கு வேள்வியொன்றிய ற்றி அதில் சோமபானம் நீரடைந்திடும்படித் தருவேனென்று சொல்லி அவர்கள் மகிழ்வுறக்கூறிச் செயம்பொருந்திய வே லாயுதத்தையுடைய தனது மாமனாகிய சையாதியரசனை அழைத்து உனக்குப் பெரும்பயனுண்டாம்படி வேள்வியொன் றியற்ற விரும்பின மென்றமாத்திரத்து அவன்வேள்விக்குரிய

யாவுஞ் சேகரித்தனன். அநேகமான பெரிய முனிவர்கள் வந்துகூடினர், சிவனனென்னு முனிவரானவர் வேதாகமங்க ளிற் கூறியபடி சிவபெருமானுக்குரிய வேள்வியைநடத்த வாரம்பித்தனர். இருவர்களாகிய அச்சுவினிதேவர்கட்கு ஒப் பற்ற அவிர்ப்பாகத்தை மிக்ககாதலோடு நியமித்த மரபினை அருவிப்போலப்பாயு மும்மதங்களையுடைய அயிராவதத்தை யா ரோகணித்துசசெல்லுங தேவேந்திரன் தெரிந்து, பிரகாசியா நின்ற வச்சிராயுதத்தை அதிசீக்கிரமாகக் கையிற்பிடித்து யா னையேறிப் பொன்னுலகத்தைவிட்டு மண்ணுலகில அறிவினில் மிகுந்த சிவனமுனிவர்நடத்திடு வேள்விசசாலையினை நீண்ட முரசவாத்தியமெழத்தேவகூட்டத்தோடுநெருங்கி, முனிவரை நோக்கிச் சோமசூரியாக்கினி நேத்திரதாரியாந் தேவர்கட்கெல் லாஞ் சிகாமணியாய்வருஞ் சிவபெருமான் சந்தோஷிக்க நீர் செயும் பரிசுத்தம்பொருந்தியவேள்வியை நான்விலக்கிலேன், ஆயினுந் தெய்வலோகத்தில் தேவர்கள் மனைதோறுஞ்சென்று அவர்கள் கட்டளைப்படி யவர்கட்கு வைத்தியஞ்செய்துவரும் அச்சுவினிதேவர்கட்கு அவியுதவலொட்டேன். வேள்வியியற் றுமந்தணீர்! அச்சுவினிதேவர்கள் தேவர்கள் கட்டளைப்படி யொழுகுமொரு இழிவை யுடையவர்களன்றி இவ்வுலகத்தில் வாழு மானிடர்கட்குச் சமமானக் குற்றத்தையுடையவர்கள். அத்தகையினருக்கு நீவிர் அவிசு நியமித்துக்கொடுத்தலடாது. இவ்வுலகனைத்தினுக்குந் தலைமையினை வாய்ந்தவர்க்கே வேள் யிலவிர்ப்பாகங் கொடுத்தல் தகுதியாகும். பஞ்சேந்திரியங்க ளின் சேட்டைகளைக்கெடுத்த பண்ணவீர்! துன்பமெல்லா மொன்று குவித்துவைத்தாலென்னப் பெருந்துயரை ஒரு காலத்தில் நாமடைந்து ஒளித்து வாழ்ந்தனம். அககாலத்தில் பிளவுப்பட்ட சுவாலையோடு ஓங்கி எழுகின்ற எழுநாச்சுகளை

யுடைய அக்கினிதேவனனவன் சுவைத்த நல்ல மொழியை நம்மைத்தேடிவந்து உரைத்தனன். ஆதலால் அவனங்ஙனஞ் செய்த வுதவிக்குக்கைம்மாருக வேள்வியில் நமக்கருகிலிருந்து அவிர்ப்பாக முண்ணும்படி யேற்பாடுசெய்தனம் அதனைவிவர மாய்க் கூறுதுங் கேட்பீராக வென்றனன்.

விருத்திராசுரனென்னு மொருகிராதனைக கொன்றத ஞல் வருததமிருந்த பிரமகத்திமருவ நாம் ஒருமடுவிலிருந்த வொரு தாமரையின் நாளத்திலொளித்துக்கொண்டு துன்பப் பட்டுககொண்டிருந்தோம், அப்போது விண்ணுலகத்தி னழ கானது நாயகனையிழநத நங்கையைப்போலும், கற்றவரில் லாத கழகததினை யொத்தும், குளிர்ச்சிபொருந்திய மலர்க ளில்லாத தடாகத்தினையொத்தும் விளங்கியது. அக்காலத் துத் தேவர்களெல்லா மொருங்குகூடி வானுலகத்தினைக்காக்கு மொரு வேந்தனில்லாவிடில் வளம்பெருது என்று நாடி ஆயிர மசுவமேதயாகஞ் செய்தவனும் புத்திரபௌத்திர களத்திரர்க ளுடனே வாழ்பவனும், உலகமுழுவதினையு மொருகுடைக்கீ ழரசாட்சி செய்பவனுமாகிய நகுஷன்என்னு மரசனை இந்திர ஞக நியமித்தனர். அவனவ்விடத்தரசாண்டுவருங் காலத்தில், தனக்குச்சமான மொருவருமில்லாத இந்திராணிமீது மோகி தது, பசியவழகிய ஆபரணங்களைச் சுமந்து பிரகாசிக்கின்ற புலோமிசையைச் சமீபித்து உன்னிடத்தி லாசைகொண்ட னன என்பா லருள்செய்யவேண்டு மென்றனன். இதைக் கேட்ட இந்திராணி தனது மனதினிடத்தில் தந்திரங்கொண்டு துன்பமடையாதபடி சொல்லுவாள். அரசரேறே; இவ்விண் ணுலகத்தினை அரசாள்பவரெவரோ அவரே யெனக்கு நாயக ரென்பது நிச்சயம் ஆயினும் என்பால்வருகையில் பட்டத்து

யானையாகிய அயிராவதத்தின்மீதும், அனேகமான தவஙகள் செய்த மா தவர்களாகிய எழுமுனிவரர்களுந்தாங்க பல்லக்கின் மீதும் வருதல் முறைமையாகும் அல்லதூஉம் நானிப்போது ஒருவிரத மனுட்டித்துவருகிறேன் அதுமுடிய சிற்சிலநாள் செல்லுமென்று நலலவிதமாக மெல்லவோதி நகுஷனையனுப் பிவிட்டுத் தனது ஆசிரியராகிய வியாழகுருவையடுத்து வணங் கிக கும்பிட்டுச் செய்தியெல்லாம் விரிவாக வுரைத்து நின் ருள். வியாழபகவான்கேட்டுச் சசியே! பயப்படேல் அகத்தி யா சாபத்தால் நகுஷன் அரசையிழப்பான் நீசெல்லுகவென்று கூறி அக்கினிதேவனைக்கூப்பிட்டு இந்திரன்வாழ்கின்ற இடத் தைக்கண்டுபிடித்து வாருமென்றனுப்ப அக்கினியு நம்மைத் தேடிக்கண்டுபிடித்து நகுஷனது முயற்சியும் வியாழபகவான் சொன்ன சந்தோஷமுந் தெரிவித்தான். அவைகளைக்கேட்டுத் துன்பத்தினையடைந்த நாம் பின் சந்தோஷசெய்தியால் களிப் படைந்து வெளியில்வர நகுஷனென்பவன் அகத்தியனைப் பணிந்து சசிசொன்னவற்றைச்சொல்லி யிரப்ப உடனேமுனி வர் சிவிகையைத் தாங்கச்சென்றான். நீர்க்குமிழினையொத்த மோகத்தினை விரும்பிப் பெரியோரைப் பணிகொள்ளும் அற்ப வுள்ளத்தானாகிய நகுஷன் அம்முனிவர்கள் செயலை திருவரு ளென்றெண்ணுது அதிசீக்கிரமாகச் சசியினிடத்திற் செல்லும் படி சற்ப! சற்ப!! வென்றான் அக்கணமே அகத்தியர் கோபங் கொண்டு நகுஷனைநோக்கிச் சற்பவென்ற நீ சற்பமாகப் போ கக்கடவதெனச் சபித்துவிட்டனர். இதுசெய்தியை நாங்கே ட்டு உடனே நமது லோகத்திற்குச்சென்று செங்கோலோச்சி வாழ்ந்து அக்கினிபகவானுக்கும் அவிர்ப்பாகமுதவினம். யாகத் தில் நடத்தும் அவ்விய கவ்வியங்களனைத்திற்கு முதல்வன் யாமே. செவ்விய முனிவீர்காள்! நமக்கு மாருகவந்த நகுஷன்

முனிவரால் சபிக்கப்பட்டதுபோல நீவிரும் அச்சுவினிதேவர்கட்கு அவிர்ப்பாகமீயின் சபிக்கப்படுவீரொன்றனன்.

இந்திரனிந்தப்பிரகார மிக கருவத்தோடு சாற்றியமாததிரதது முனிவர்கள் அஞ்சிய மனதகையுடையவராகச சிவனரென்னு முனிவர் இந்திரனைநோக்கிக் கூறுவர். புகழோடுங்கூடி அந்தணர்கள் சாபத்தால் நகுஷன் சாபமேற்றனனென்று கூறினாய், உடனே! அம்மொழியினைமறந்து அவிர்ப்பாகங்கொடுக்க எங்கட்கதிகார மில்லையென்று பொங்கிப்பொங்கிப் புகலுகின்றாய், எங்களுடையவாககினால் இப்போதே அந்த நகுஷனுக்கு நீ சோதரனும்படி செய்வது சததியம்.

சூரியனுடைய கிரணத்தில் பிரகாசிக்கு மக்கினியினது விரிந்த வேள்விச்சுவாலையினால் நிலைபெறு மரசினையுடைய நீ தண்டத்தின விறுதிசெய்வாய். நல்ல அந்தணர்கள் தங்கள் சரதமாகிய வாக்கினால் தகிப்பர். ஆலகாலவிடமானது தன்னைககலந்த வுயிரொன்றினையே கொல்லும், வாளாயுதமானது தன்முன்னெதிர்த்த வொருவனையே சங்கரிக்கும், வேதியர்கள கோபத்தீயானது எல்லாவற்றையு மேககாலததிலே தகித்துவிடும். இப்பெருமை பொருநதிய வையகமானது தருமங்காரணமாகத் தழைததிருக்கும், அத்தன்மத்தினை வேதமானது விசிதமாகப்பேசும், அவ்வேதமானது பெருமை பொருந்திய வேதியர்கள் வசத்தது. அத்தகையராகலின் வச்சிராயுதத்தையுடைய இந்திரனே! வினையினின்று நீங்கிய பிராமணர்கள் யாவருந் தங்கள் மனத்தின்கண்ணே தியானித்து நன்மையடையும்படியான தேவாகளேயாவர். தேவர்காவலனே! நினக்குண்டாயிருக்கிற செல்வச்செருக்கினால் பெரியோரை மதித்துப்பேச வறிந்தாயில்லை உன்னுடைய வல்லமையாலாவ

தென்னவிருக்கிறது. நீ அடையவிருக்கிற துன்பத்தினையறிந் தாயில்லை மிக நன்றியினைவாய்ந்த அச்சுவினிதேவர்களை நாம் வளர்க்கும் வேள்வியினின்று அவிர்ப்பாக மேற்றுக்கொள்ளுங் களென்று சாற்றினேன். இதைத்தடுக்கவல்லவர்க ளியாரிருக்கின் றனர் நாமவர்கட்குக்கொடுப்பது நிச்சயம். என்றிந்தப்பிரகாரங் காமாதிகள்கடந்த முனிவராகிய சிவனர் பலவுறுதிமொழி களைப்பேசி அச்சுவினிதேவ ரிருவர்கட்குச் சோமபானமடை யும்படி ஒளிபொருந்திய இந்திரன்காண அவன்முன்னிலையில் வழங்கினர்.

பெருமைபொருந்திய மிக்க தவத்தினையுடைய சிவன முனிவர் அச்சுவினிதேவர்கட்கு அவிர்ப்பாகங் கொடுத்தமாத் திரத்து, இந்திரனவன் ஊழித்தீயெனக் கோபித்து இடபக் கொடியினைவாய்ந்த இறைவன் வேள்வியையழித்து இம்முனி வனுயிரையுமுண்டு போவதேயன்றி விடேனென்னத் தனது வெண்மை நிறம்பொருந்திய ஐராவதயானையைச் செலுத்தி வச்சிராயுதத்தைச் சுழற்றிவிட்டு நின்றான் மாதவர்கள் சிலர் கண்டுபயந்து ஆசீர்வாதஞ்செய்தனர். வேள்வியின்முன்னே ஆண் சிங்கத்தையொத்து விளங்கிக்கொண்டிருந்த சிவன முனிவர் தன்னை நோக்கிவருகின்ற வச்சிரப்படையைப் பார்த்துக் கோபித்தமாத்திரத்துக் கற்புடைய மாதர்கள் நேத்திரங் களைக்கண்டு பயப்படும் காமுகர்கள் நெஞ்சினைப்போல, அப் படையானது ஆகாயத்திலேயே நின்றுவிட்டது. இவ்வுலகமுழு வதினையுஞ் செயித்து நடுங்கும்படிச்செயுஞ் செயத்தினைவாய் ந்த வச்சிராயுதம் வீணாய் விட்டமாத்திரத்தில் அயிராவதப் பாகன் தனது சந்தோஷமும், ஆண்மையும், வீரமுங் கெட்டு வெட்கமடைந்து நின்றனன். அவ்வாறு நின்றவனைச் சிவன

முனிவர் நோக்கி யுரைப்பார். தேவர்கள்சூழ விண்ணுலகத்தி னுக்குத் தலைமைகொண்டு வாழு மாண்மையும், சகல போகங் களும்பொருந்த வனுபவிக்கின்ற செல்வமுங்கொண்ட பே தையாகிய மகவானே! ஒப்பற்ற வாணையினாலே சிவபெருமா னது திருவடிகளை வணங்குஞ் சிவனடியார்க்கபராதம் விளைத் தனை. அப்போகங்கள் யாவு நின்னைவிட்டுப் போகக்கடவது என்று சாபமிட்டனர். உடனே ஆகண்டலன் தனது செல்வ மும், வலிமையும், அணிகளும், உடைகளுந் தேகவொளியு மிழந்து இளைத்தனன். விண்ணுலக முழுவதினையு மொரு குடைக்கீழ் யாண்டுவந்த சதமகனே யித்தகைய நிலையை யடைவனேல் ஆராயுமிடத்து அழியாத பொருளும் வலியு மிவ்வுலகத்திலுண்டோ யில்லையிலலை.

அந்தோ? பொறாமைகொண்ட புரந்தரன் இந்தப்பிரகாரந் தரித்திரத்தால் மிக்க மெலிவடைந்து துன்பத்துடனே சில நாள் கழித்துப் பின்னர் அதிகச் சிறப்பினைவாய்ந்த தனது குருவாகிய வியாழபகவானது திருவடிகளை வணங்கித் தனது குறைகளையெல்லா மெடுத்துச் சொல்லித் தன்னைக் காக்கும படிவணங்கி நின்றான். இதனைக்கேட்ட குருவானவர் இந்திர னுக்குவிளைந்த சாபத்தினையும், வேந்தனுரைத்த மொழியினையு மாராய்ந்து மொழியலுற்றனன் தேவர்கட்கரசே! சாபத்தி னாலே மிகவுந்தளரேல் பூர்வசென்மத்திற்செய்த வினைவந்து வளைந்து கொண்டால் இவ்வுலகில் அதனை யனுபவித்தேமாற் றல்வேண்டும். இச்சென்மத்தில்வந்து இப்போதுனக்குண்டா கிய வினைக்குக்காரண முன்னமே செய்துக்கொண்டிருக்கி றாய். எவர்களெந்தக் கருமத்தை முடித்தார்களோ அதே கரும மவர்கட்குப் பயனாகிவரும். வீணேவிசனப்படுவதினா லென்ன

பயன், நீ பூர்வத்தில்செய்த வினையும் அது தீரும் வழியுஞ் சொல்லுகின்றோம் கேட்பாயாகவென்று சொல்லத் தொடங்கினர்.

இதங்களையேசெய்து சந்தோஷிக்கின்றவனாய், மயக்கத்தை ச்செய்கின்ற ஐம்பொறிகளை வென்றவனாய், கோபமாதி கடந்தவனாய் உதங்கனென்னும் பெயரையுடையவாய்ந்த வொரு வுத்தம முனியிருந்தான். அவன் அதிக விசாலமபொருந்திய நீழலைச் செய்யாநின்ற வொருபலாமரத்தி னடியிலிருந்து சகல வரங்களுந் தழைத்திடுந் தேவலோகத்தி லுள்ளது மூப்பை நீக்குவதுமாகிய அமுதத்தைப்பெறவேண்டி மிகுந்த தவத்தினைச்செய்தனன். அந்த வரியதவத்தினது நெருப்பானது எழும்பி யெங்கும்பரவி ஆகாயத்தினையுந்தகிக்க, சகிக்கலாற்றாது தேவர்களுன்றோடுகூடி விண்ணுலகை நீங்கிக் கயிலாசத்தினையடைந்து ஆலமுண்டருள்செய்த வமுதனே, காலகாலனே, காமதகனனே, அடைக்கலம்! அடைக்கலம்!! உதங்கமுனிவனது தவத்தின் தீயால் சகிக்கக்கூடவில்லை, என்றுகூறி வணங்கிய மாத்திரத்து நமது சிவபெருமான் அவர்களை நோக்கி நடுங்கவேண்டாம் நும்பதிக்குச்செல்மின் என்று கட்டளையிட்டு உன்னைநோக்கி மாதவத்தினைச் செய்துகொண்டிருக்குமுதங்கமுனிக்கு இறப்பைக் கெடுக்கின்ற தேவாமுதத்தை யீந்திடுவாயென்றருளி மறைந்தனன். பின்னர் பெருமானை வணங்கிக்கொண்டு நீ திரும்பி அந்தப்பிரகாரஞ் செய்யாது வஞ்சனைகொண்டு ஒரு நீசவேடம்பூண்டு தேவாமுதத்தைத் தோலிலேந்திக்கொண்டு சிறிதுதூரத்திலிருந்து முனிவனை நோக்கித் தேவர்கட்குங் கிடைத்தற்கரிய தேவாமுத மிதோ வேந்தி நிற்கின்றேன் பெற்றுக்கொள்ளென்றாய். உதங்கன்

கண்டு யாரோ வொருநீசன் கள்ளுண்ட வெறியினூற் பிதற்று கின்ற னிவனுககுத தேவாமுத மெங்ஙனங்கிட்டுமென நினைத்து இவ்விடம்விட்டு அப்புறததேபோவென்று காததாற்சுட்டியோட்டினன். உனது வஞ்சனை முடிநதுவிட்டதென்று சந்தோஷித்துப் பயப்படுவானைப்போல் நடிததுக்கொணடேயோட்டம்பிடித்தாய், வேதமுழுது நன்குணர்நதவனுகிய வுதஙகன் பின்னர் அறிவினூலாராயநது உண்மை தெரிநது கொண்டு சொல்லுவானுயினன் சிவபெருமான் கொடுககும்படிக் கட்டளையிட்டதை மறுத்து வஞ்சனையால் வஞ்சிதத அந்தப்பேதையாகிய தேவேந்திரன் அந்தணர் சாபத்தினுலேவெந்து, பெருமையாகியசெல்வ முழுதுமிழந்து, வலியுநீங்கி வசசிராயுத முங் கெடுவதாகவென்று கோபித்துரைத்தனன். அத்தகைய உதங்கன் சாபமானது நின்னைப்பின்தொடர்ந்துப்பற்றி நினது செல்வமாதி யனைத்து நீங்க வருததமுறசசெய்தது. தேவேந்திரனே குற்றமில்லாத வேதியர்களை யவமதித்து அன்பினறியொழுகிறவ னெவனுயினு மவனை யப்பொழுதே கெடுதிகளெல்லாஞ் சூழ்ந்துகொளளும். சிருஷ்டி காத்தாவாகிய பிரமனும், சங்கார கர்த்தாவாகிய நமனுங்கூடி அதிகமாக வைதாலும், மிகத்தாக்கினூலும், தேகததினுக் கிறுதிசெயதாலும், எங்கும்படி சபித்தாலும், இவற்றை லட்சியஞ்செய்யாது அறிவினர்கள் வழிபட்டே நீக்கிக்கொள்ளுவா. தங்களுககொருவா தீஙகு செய்வரேல் அவரைக் கலஙகும்படி கோபிததலும், வைதலும், தாககுதலும், சாபங்கொடுத்தலுங கொல்லுதலும் வேதியர்கட்கியல்பேயாம். ஆகையால் வேதங்களையாய்ந்த வநதணர்களோதும் வாய்மொழி யொன்றினூலே இப்போது நீ துன்பமடைநதனை இத்துன்ப நீஙகுமாறு ஓதுவோ முவநது கேட்பாயாக. அன்னமாகியும் பன்றியாகியுமுருக்கொண்டு அய

னரியால் தேடப்பட்ட நமது சிவபெருமான் பண்டைகாலத்தி லுண்டாகிய தேவர்கள் மரணத்தை நீக்கு மமுதத்தை மிகுதி கொண்டு அவ்விடத்து வாழுகின்றனன. அந்தக்காரணத்தால் அதனை நினைத்து இனி அமுதத்தை யடையலாமென்ன நின் ருல் வஞ்சிக்கப்பட்டபின்னு முனிவன் அவ்விடத்திலேயே யுறுதியாக வாழ்கின்றுன். நீரினுல்மிகுந்த சேற்றினை நீரினைக் கொண்டல்லாது மாற்றக்கூடாததுபோல வேதியராலுண்டா கிய சாபத்தினை அவர்வாக்காலல்லாது ஒருக்காலு நீங்காது. ஆகையால்உதங்கமுனியினிடத்துத்தேவாமுதத்தோடுசென்று இதமான வார்த்தைகளைப்பேசி, சந்தோஷிக்கச் செய்வாய், மலர்ந்த கமலத்தை யாசனமாகக்கொண்ட இலக்குமியானவள், அலர்ந்த கடுக்கைமாலையினையுடைய கண்ணுதற்பெருமானின் திருவடிகளைப் பூசித்து நலந்திகழப்பெற்ற விஷ்ணுவினது மாாபினிலே வாழப்பெற்றனள அத்தலத்தினை யாவருந் *திரு மங்கலமென மொழிவா. அங்குவீற்றிருக்கும் பெருமானை மங்கலேச்சுர னென்றும், அமுதேச்சுர னென்றும் வழங்குவர். இனிமேல்வருந் துவாபரயுகத்தின் முடிவில் சைமினிமுனி வரானவர் அப்பெருமானைப் பூசித்துப் பலவரங்களைப்பெற்று ஏகமாகவிருந்து ஒலிக்குஞ் சாமவேதத்தை ஆயிரஞ்சாகைக ளாகப்பிரித்துக் கருமகாண்டத்தினை மீமாம்சத்தினைக் கொ ண்டு நிச்சயித்த போகத்தினையும் மோட்சத்தினையும் விரும்பு வார்களின்பொருட்டு நன்கு விளக்குவார். அப்போது பலாவ னத்தி லெழுந்தருளும் நங்கடவுளுக்குச் சாமவேதீச்சுரனென்

* திருமங்கலமென்பது-பூவாளூா நகரவீதிகளில் ஒன்ருய்ப் பூர்வத்திலிருந்ததென்றும், அவ்வூராலய முண்டென்றும், அதுவே இதுபோதுபிரிந்து வேருய்த்தோறறப் படுகினற தென்றுங் கூறுவா

றும், அத்திருமங்கலத்திற்குச் சாமவேத புரமெனவுங் கூற்ற மற வெடுத்தோதுவர் அத்தகைய தலத்தில் முனிவர் அருளி னாலே பூசனைசெய்து, திருமங்கலத்தினுக்குக் கிழக்குத்திசை யில் வில்வவனத்தினைச்சார்ந்து விளங்கும் பூவாளூர் துலங் கும்படி பிரகாசித்தெழுங் கல்யாண சிகரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஒப்பற்ற கருணையே திருவுருவாயமைந்த திருமூல நாதனையும் பூசித்து, உன்னைத் துன்பப்படுத்துஞ் சாபத்தி னின்று நீங்கி வலியுஞ் செல்வமுந் திருமூலநாதனருளாற் பெற்று அந்நகரினுக்கு மேற்குத்திக்கிலுள்ள அருச்சுனவனத் திலடைந்து, எக்காலத்து நீங்கப்பெறாத செல்வத்தினை யடையவேண்டி குபேரன் பூசித்துச் சித்தியடைந்த சிவலிங் கப்பெருமானை வணங்கித் தெய்வலோகத்திற்சென்று அதனை யாண்டுகொண் டிருக்கக்கடவா யென்ன வியாழப்புத்தேள் விளம்பினர்.

அருளினாலே யாசாரியரருளிய மொழியனைத்துங்கேட்டுப் புருகூதன் பெருகிய சந்தோஷத்தேக்க வவ்விடம்விட்டு நீங்கி அமுதத்தினையுங் கையிலேந்திப் வினைகளையெல்லா மோட்ட விளங்குந் திருமங்கலத்தினையடைந்து ஒப்பில்லாத உதங்க முனிவன் மகிழ்வெய்த முகமன் கூறியிருந்தான். முனிவன் தன்னையடுத்த அமராவேந்தனுக்குச் சோடசவுபசாரஞ்செய்து கொடுத்த வமுதத்தினை வாங்கிக்கொண்டு சொல்வான் குலி சாயுதத்தை யேந்திய கோவே கமலனாதியர்களாலே பூசிக்கப் பெற்ற சாமவேதீசுரரிதோ விளங்குகின்றனர். இவரைப் பூசித் தது உத்தமமாகிய வில்வவனத்தில் விளங்கும் பற்குனிதீரத் தில் ஸ்நானஞ்செய்து சிவலிங்கப்பெருமானை விதிப்படி பூசையாற்றி, சிவபெருமான கட்டளையைமீறிச்செய்த வஞ்ச

னையையும யானிட்ட சாபததினையுஞ் சிவன முனிவரீந்த சாபததினையு நீககி வானுலகசூசெலவததினை யடைந்து முன்புபோல் வாழக்கடவாயென்றனன். இந்தப்பிரகார உதங்கமுனிவன விருப்பத்தோடு மனமகிழ்ந்து புகல வஞ்சனையைச்செய்த வலாரி சந்தோஷிததுக காதலா மலகம்போலக் காட்சிதந்தருளுங் கணனுதற்கடவுள கழலடியைப் பூசைசெய்தான். அவ்விடத்தில திருவருள்பெற்று, நீஙகி யழகிய பூவாளுரைத தீங்கெலாமகலச சேர்ந்து, தெளிந்த பற்குனிநதியிலாடிக் கலயாணநாதர் திருக்கோபுரததைத்தாழ்நது, கோயிலுட்சென்று சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, சென்மாந்தரங்கள்தோறும் விடாது தொடருமன்பிழுகக கற்பக்கிரகஞ் சமீபித்து, திருமூலநாதரைத தரிசித்து, சிறியேன் முழுதும் பிழைப்பட்டேன் அடியேன் முழுதும் பிழைகரும்வண்ணங் திருக்கடைக்கண்சாத்தியருள வேணடுமென்று போற்றி அபிடேகாதி திரவியம்பல சேகரித்து, வரமலிந்த புட்பலிங்கேசனையாட்டியருச்சித்து, பிரணவத்தோடுங்கூடிய பிழையற்ற சாநதமயாந்தஙகூடிய திருமந்திரத்தினை உருத்திராகக செபமாலையால் வேண்டுமளவுஞ் செபித்து, கோடிசூரிய ரேககாலததில் கூடுவதினாலுணடாகிய பிரகாசத்தோடு, கோடி சந்திரர்களின் கூட்டததி லுண்டாகிய குளிர்ச்சி யடுத்துப் பொருநதிறெலென்ன மஙகைபஙகன் மேனியினையும், விடமமைந்த மிடறறினையும், திரிநேத்திரத்தினையும், தத்துவச்சேட்டைகளைத தகித்த சனகராதியர்கள் சூழ்ந்து கைத்தலஙகூபபி யேத்துங் காடசியினையு முடையவனுக காண்டோளத்தனை வில்வமூலத்தமர்நத வமலனை யாதுங்தோயா முத்தனை யனைத்துமாகு முதல்வனைத தியானஞ்செய்துகொணடு தேவேநதிர னினரூன். இநதிரனிவ்வாறாக எற்றிவருநாளி லோரநாள சநதிர

மகாமகோபாத்தியாய

சடாபாரத்திளையுடைய சங்கரன் சதமகனெதிரோ தோன்றிச், சாபமகன்றது சகல சம்பத்துடன், பழையபடி வாழக்கடவா யென்று திருவாய் மலர்ந்தருளினர். இமையவர்வேந்த னினி பிழைத்தேன்பிழைத்தேனென்று பலகால் வந்தனைபுரிந்து, சாலவலம்வந்து, கூத்தாடி, ஆனந்தபாஷ்பங்கணகளினின்றும் பொழிய,பலவினைகளும் விட்டோட பரமனைநோக்கிதோதத ரிக்க வாரம்பித்தனன்.

கங்கையைச்சடையில்வைத்தகடவுளேசரணநதெய்வக்
கொங்குயிர்கடுக்கைமாலைக்குழகனேசரணம்பச்சை
மங்கையோர்பாகம்வைத்தவள்ளலேசரணநாயே
னிங்குனைச்சரணஞ்சார்ந்தேனென்பிழைபொறுத்தல்வேண்டும்

பண்டெலாமடியேனுலும்பங்கயக்கடவுளாலும்
விண்டுவினுலுமேனைவிண்ணவராலுநகண்டு
கொண்டிடப்படாதசீலக்கோலநோகாட்டுநீல
கண்டற்குத்தமியேன்செய்யுங்கைம்மாறுகாணிலேனுல்.

வளங்கெழுஞானத்தாலும்வரமலியோகத்தாலும்
விளங்கியகருமத்தாலுமெய்த்தவராதியோர்க
ளுளங்கொடுவழிபாடாற்றுமொருபெருங்கடவுணின்பாற்
றுளங்கலில்லாதவன்புந்துறுத்துதல்வேண்டுமென்றான்.

இந்தப்பிரகார மிந்திரன் கேட்டுக்கொண்ட பலவரங்களையு நல்கி யெமது பெருமான் மறைந்துவிட்ட மாத்திரத்துத திரி யம்பகன் திருவருளா லாகாயத்தினின்றும், வியாழபகவான, தேவர், குடை, கவரி, யானை, அரம்பையராதியர் சமீபிதது வர அனைததுங்கண்டு ஆனநதங்கொண்டு அயிராவததததினை நோககிச சொல்வான், தௌளிய திரைகளைவீசாநின்ற நீம

பாற் சமுத்திரத்தினின்று முண்டாகிய ஐராவதயானையே நம்மைச்சார நாம் வீற்றிருக்கும் சபையில் ஊர்வசியானவள் இல்லாதிருப்பாளானால் அச்சபை அழகுபெறாது. வேதங்களை யெல்லாந் திருவாய்மலர்ந்தருளிய நாவினிடத்துவாழப்பெற்ற மடந்தைக்கு இடங்கொடுத்த விரணியகருப்பனசபையில் ஓர் நாள் நிருத்தஞ் செய்துகொண்டிருந்த ஊர்வசியானவள் மண்ணுலகத்துப் புரூரவசுவென்னும் வேந்தனை விரும்பிய காரணத்தால் விரிஞ்சனிட்ட சாபமேற்று அதனை விடுக்கத்தெண்ணீர்பபாய்ச்சல் நீங்கப்பெறாத காவிரிநதிதீரத்தில் பலவண்டு பாடி ரீங்காரஞ்செய்யும் பாரிசாத வனத்தில் தவஞ்செய்து கொண்டிருக்கு மவ்வூர்வசியை அழைத்துக்கொண்டு இங்குவருவாயென்றனன்.

அதனைக்கேட்ட அயிராவதமானது அங்ஙனமே பாரிசாத வனத்திற் சென்று தவஞ்செய்துகொண்டிருந்த ஊர்வசியை அழைக்க அவள் அசைவற்று அருந்தவத்தால் மௌனமாயிருந்ததைக்கண்டு அவளைப்பெயர்க்கவெண்ணித் தனது தும்பிக்கையால் பெருமூச்சினை யெறிந்து வளைத்து அலைத்து மலைத்துப் பிடித்தீர்த்து மூர்ச்சித்து விழுந்தது. அப்போதுதன்மீதிருந்த மணியானது சிதறிப் பிரபஞ்சவாசனையொழிந்த ஐம்பொறிகளைப்போல ஓசையற்றுப் பூமியில்விழுந்து எல்லாவுருவுந் தனதுருவாய் விளங்குஞ் சிவபெருமானது சிவலிங்கசொரூபமாய் விளங்கியது. எழுமுழமுயர்ந்து பெருத்திருக்கிற அயிராவதமானது ஊர்வசியோடு வந்து சேருமென வெதிர்பார்த்துக் கொண்டிருந்த தேவேந்திரன் நடந்தவரலாற்றினை அறியாதவனாய இதுகாறுந் தாமதித்ததற்குக்காரணமென்னையென நினைந்தெழுந்து குளிர்ச்சிபொருந்திய ஆகாயமுகட்டினை அளப்பதற

கெழுந்தா லென்னவோங்கிய பாரிசாதவனத்தினுக்கேகி அயர்ந்து வீழ்ந்துகிடக்கும் யானையினது நலிவினைக்கண்டு, அங்கெழுந்தருளியிருந்த காருணணிய மூர்த்தியாகிய சிவலிங்கப் பெருமானைப் பூசனைசெய்து அப்பெருமானுக்கு அயிராவதேசுரரெனத் திருநாமமிட்டுக் கந்தங்கமழும் பாரிசாதேசர் திருவருளால் வெள்ளையானையினது மூாசசையைத் தெளிவித்துத் தனது பிரமசாபத்தினையுமாற்றித் தவஞ்செய்துக்கொண்டிருந்த ஊர்வசியையு மழைத்துக்கொண்டு சிந்தைமகிழச் சிவலிங்கத்தினையும் வணங்கிப்போற்றித் திரும்பவும் அருளுக்காதாரமாய்விளங்கும் பூவாளூராலயத்திற்குருகிப்பேரன்பிற்பூசைசெய்து திருமூலநாதர் திருவருளால் தனது பரிவாரத்தோடு அழகுபொருந்திய மருதவனஞ்சார்ந்தான். அளகைநகரில் வீற்றிருக்கும் அரசன் பூசைக்கு அருள்புரிந்த வளமிக்குயர்ந்த கயிலாயநாதரை வந்தனை வழிபாடுசெய்து உளத்தின்கண்ணே பெருங்களிப்போடு பொன்னுலகம்புகுந்து இன்பப்புளகமரும்பச் சசியோடுபுணர்ந்து அரசாட்சி செய்துகொண்டிருந்தனன். நைமிசாரண்ணியர்களே! மகவான் பூசைபுரிந்ததனைச் சொன்னோம், இனி சாம்பசிவன்நேத்திரத்தால் சாம்பலாகிய சாம்பன் மறுபடியும் உருவம்பெறஇரதிதேவிதவஞ்செய்த வரலாற்றினை வகுப்பாமென்று சூதமாதவன் தனதுகளினமுகமலர நவில்வாராயினர்.

இந்திரனருச்சனைசருக்கமுற்றிற்று.

இரதியருச்சனைச்சருக்கம்.

முககண்ணுயகர்மீது முனிந்து செய்திருந்தத்கனுர்வேள்வியிற்கலந்திருந்ததேவர்களை வீரபத்திரக்கடவுளைக்கொண்டு

தண்டித்து மிகுதியாகவிருந்த பாவத்தினையும்போக்க எமது பெருமான் தனது கருணையால் அழியாத வல்லமையோடு இராக்கதர்கள் குலங்களெல்லாந் தழைக்கத் தாரகனென்னு மசுரன் வானவர்களுக்கு வயிரியாய்த்தோன்றி அதிக கொடுமையாத கனாய்ப்பிரமவிஷ்ணுவாதி தேவர்களோடுயுத்தஞ்செய்துதோற்கடித்துத் தேவர்களைச்சிறைபிடித்துக்கொண்டுபோய்த்தனக்கு இழிவானதொழில்களைச்செய்யும்படி அடிமைகளாக்கி ஆண்டுவந்தனன், அத்தாரகனது ஆணையைக்கடக்கச் சத்தியற்றவர்களாய் நாணமடையத்தக்க பலதொழில்களைப் பிரதிதினமுஞ்செய்து வலியிழந்து சகிக்கமுடியாதவர்களாய அவ்விராக்கதர்கண்களிலகப்படாதபடி சிலரொளித்துத் திரிந்தனர், இவருட்சிலர் சதுர்முகக்கடவுளைச்சார்ந்து மலரடிபணிந்து நீக்குவதற்கருமையாயிருக்கிற வெங்கள் துன்பத்தினை நீக்கியருளவேண்டுமென பலபலவாகத் தோத்திரித்துநின்றவருள் இந்திரன் மொழிகுவான் நான்முகக்கடவுளே! அதிக புயபலபராக்கிரமத்தையுடைய தாரகன் வசத்தர்களாகி யெங்களவலியாவுஞ் சிந்தினம், அனேகமான வேலைகளுஞ்செய்து இளைத்தனம் அத்தாரகனுக்குச் சமையற்செய்பவன் அக்கினிதேவன், சலங்கொணர்பவன் வருணதேவன், வீடுசுத்தஞ்செய்பவன் வாயுதேவன், வீடுகள்தோறும் பிரகாசிக்குந் தீபங்களை யேற்றுந்தொழிலைவாய்ந்தவன் சந்திரன், பஞ்சாங்கஞ்சொல்லுந் தொழிலைப்பெற்றானெமதுகுருவாகிய வியாழபகவான் நாகநாட்டைக்காப்பாற்றிவந்த நான் அவுணர்கோன் ஆங்காங்கு செல்லுந்தோறும் பின்னர்சென்று நாக்கானது வறண்டு உளந்தடுமாறிச் சேனையோடு சேவகஞ்செய்யுஞ்சேவகன், இத்தகைய கொடிய கன்மங்கள்பொருந்த நலிகின்றோம் என்செய்வோம் எங்களையெல்லா நல்வழியிலுச்சீவிக்கும்படிசெய்குவாய் என்று

இருகண்களினும் நீர்சொரியநின்றனன் இரணியகருப்பனாகிய பிரமன் இவர்கட்கெல்லாம் இனிதுவசனஞ்சொல்லி அனுப்பி விட்டு மாரனுடனே அந்தப்புரத்திற்சென்று மொழிகுவார ஈரஞ்சற்றேனுமில்லாத சருகுகளையுண்டு இனிய யோகஞ்செய்துகொண்டுவாழும் வீரமிகுந்த முனிவர்களது பெருமை பொருந்திய மனத்திலுள்ள தவவலிமைகெட வகற்றி அம்முனிவர்களை அழகிய மாதர்களோடு சேர்ப்பிக்கு மாட்சிமையையுடையவனே! கேட்பாயாக, அதிக ஆற்றலையுடைய தாருகாசூரனையழிக்கும் வல்லமையுடையவர்கள சந்திரசடாதரனாகிய சஙகரன் அருளு மிளையகுமாரராகிய வேலாயுதக்கடவுளல்லாமல் இவ்வுலகில் இதுகாறும பிறந்தவர்களுமிலலை, இப்போது பிறந்திருப்பவர்களுள்ளு மில்லை, இனிப்பிறப்பாரகளுள்ளுமில்லை, அத்தகைய குமாரககடவுளவதரிக்குஙகொள்கைககு எதிஙகிலலை, வண்டுகள் ரீங்காரஞ்செய்யப்பெற்ற மாலையணிந்த கூந்தலைவாய்ந்த அம்மையாராகியபாரவதி மேருசாரலில் தவஞ்செய்கின்றாள், மழுவாளியாகிய மகாதேவர் கைலையில்யோகத்தில் வீற்றிருக்கின்றார், தேவர்கள் பூனைவாய்ப்பட்ட கிளிகளைப்போல அவுணர்களாலே அவதிபடுகின்றனர், மூவர்கட்குமுதல்வனாகிய மூர்த்தி உமையாளைமணந்து தேவரிடுக்கண்களைத தீர்த்தருளுஞ சேவ்வேளாகிய சிவசுப்பிரமணியக்கடவுளைத தரும்படியான முயறசியைச் செய்யவல்லார் யாவரிருக்கிறாகள், இன்பத்தினைப் புட்பபாணஙகளாலுண்டாககுந தலைமைத தன்மையைவாயந்த உன்னைலலலாது வேறுயாருணடு, சத்தித தூய்பெருகி இருகரையும்புரள வலைகளைமோதியோடும் நதியானது, இளமையானகனறுககுட்டி அலருமபடித்தாய்ப்பசுவை யடித்துககொணடு போமபோது அதனைததடுககாமல் கரையிலிருந்து வேடிககைப் பாரத்துக்கொண்டிருககிறவர்கள்யாவரு

கரும் பாவமுண்டாகாது. அவ்வெள்ளததிற்சென்று அதனைத தடுதது மீட்டுககொணடுவருஞ் சததியினைவாய்நதும அஙஙனஞ்செய்யாது கரையிலே சும்மாயிருப்பாரகளே யாமாயின் அவாகளையே பாவமடையும், பெருததுத திரண்டுபரந்து குளிாசசிபொருநதிய முததுமாலைகளைததரிதது இணைந்து, குவிநத தனஙகளையுடைய மாதாகளையும், எழுகைப்போலுந் திரண்ட தோள்களையுடைய புருடாகளையும் ஒனறுய்சசோப்பிதது அவாகளுக்குக கலவியினைவிளைவிககும வல்லமை உன்னிடததிருப்பதால கருமபுவில்லினையுடையகாமனே! உன்னையே துனபமடையும, ஒளிபொருநதிய வணணததினைவாய்நத கலைகளோடுஙகூடிய வெணமையான சநதிரனைக குடையாககொணட மனமதனே! தேகமெடுததததினாலுணடாகிய பிரயோசனமறிவுடையோாககுண்டாகிய துனபததினை நீக்கி உதவிபுரிவதே பெருநதவமாககும, தேவர்கட்குஉதவிபுரிதலஎவருககுககிடைககும அததகையதுனககே கிடைததது ஆகையால அதிசீககிரமாயஎழுநது உனசேனையோடு சென்று பாவதபுததிரியாகிய பார்வதியாரை மணக்க அரியதவததி லெழுநதருளியிருககும் பெருமான் திருவுருவில கருமபுச சிலையால ஐஙகணைகளைபிறயோகிதது வருவாயென விடைகொடுததனா.

எமதுபெருமான் யோகங்கூடியிருந்த அச்சாரலில தேவர்களெலலாம் மகிழ்வடையவும், அதிகவூககததோடுசெனற மன்மதன் அருள்தாங்கி முனனேக வாசனைநீஙகப்பெருத வசநத காலம்வநதது விருட்சஙகளுங கொடிகளுஞ சருககளையுதிாததுவிட்டு மெலலியதளிா களைப்பரவச்செய்து மொக்குகளுண்டாகப் பசியதேன்கள்சிந்த நறுமணத்தோடு மலாகளெலலாம வெப்பக்கங் களிலுமணர்தன, மநதமாருதக காற்றுனது சுனை

கனிலுள்ளநீரிலேபடிந்து அதிகசீதளத்தோடு பலமலர்களினின்றுஞ் சிந்துமகரந்தப்பொடியளாவி மெல்லமெல்ல அந்திவணணன் அருகில்வந்து சேர்ந்தது, புட்பங்கள்தோறும் வண்டுகள் தேனைக் குடித்துப் பெட்டை வண்டுகளுடன் கலவிசெய்து ரீங்காரஞ்செய்யுங் காட்சிவாய்ந்தன, இலைகள்மலிந்துகிடக்கிற கிளைகளிடத்துத்தங்கி குயிற்குலங்கள் கூவியார்த்தன, படையெனச் சொல்லப்பட்ட மாதர்கள்பலர் வளையல்களை யணிந்தங்கள் கரங்களிலேந்தும் வீணைகளினிடத் துண்டாகிய வோசையும், தங்கள் கண்டத்தினின்றுவரு மோசையும் ஒன்றேயென்று சொல்லும்படி பாடினார்கள், இடைகளானவை துவண்டு துலங்கப் பலமாதர்கள் இங்கிதத்தோடாடினார்கள், இச்சமயத்தில் மன்மதனானவன் பஞ்சபாணங்களை வில்லினிடத்தேற்றிச் செயம்வாய்ந்ததென்றுன்னி கண்ணுதற்கடவுளின் மீது பிரயோகித்துவிட்டனன், மதுபொருந்திய துளபமாலையினையுடைய விஷ்ணுவையும் தாமரை மலரிலிருக்கும் பிரமனையு மற்றத்தேவர்களையும்நிமிடத்தில அவர்களமனதைமாற்றி வாட்டுங் கடுந்தொழிலினைச்செய்யுங் காமவாளியானது சந்திரசடாதரனாகிய சாம்பசிவன் திருமேனிமேல் தாக்கியபோது தாமரைபுட்பத்திற்குமுன்னே மற்றகுளிர்ச்சிபொருந்திய புட்பங்கள்போலாயின, யாதொருவிகாரத்தினையுஞ்செய்யாது அவ் அம்புகள் அழிந்துவிட்டனவேயாயினும் அகாரவாச்சியனாகிய அமலரை அதிக கருவத்தோடு வெல்லும்படி நெருங்கியதால் தனதுநெற்றிக்கண்ணினால் மகரக்கொடியினையுடைய மன்மதனைப்பார்த்தனர், அண்டகோடிகளையெல்லாம அரைக்கணத்தளவிலழித்திடத்தக்க நெற்றிக்கண்ணுக்குமுன்னம் நிற்பவராயாவர் கொழுந்துவிட்டு எழுகின்ற அக்கினியின்மேல் நெருங்கிவீழ்ந்த ஈயைப்போல காமவேந்தன் வெந்தனன், பெண்ணினைப்

புணாந்தானென்றும, பிள்ளைகளைப்பெற்முனென்றும், கங்கை யெனனுமாதைத தலையிற சுமந்தானெனறும் சிவபெருமானு ணமையினையறியாது பிதற்றி இகழ்நதவாகள்வாயில் புழுதி யடைய அண்ணலாகிய காமன் வெநதுவிட்டதை யறிநதனா அககாலத்துசசிலமாதா தஙகள்கூநதலோடுவீணேசோாநதுவிட அதிவேகமாகவோடினா, சிலமாதா அழகியதஙகள்நெற்றிகளில் வியாவையரும்ப ஐயகோ! ஐயகோ!! என்முா, சிலமாதா தங கள் மழலைசசொலதமொற மணமீதுவிழுநதார், சிலமாதா வே ஙகைப்புலியினைககண்ட ஆட்டினைப்போலபயநது நடுஙகினர், அநாதியே ஆன்மாககளிடததிருககிற ஆணவமலம் மாய்நத வுடன அவ்வாணவததாலாகிய காரியஙகளெலலாஞ்செயலற்று ஒழிநதாலெனன சமபராரியாகிய மனமதன் சாம்பலானவுடன் தெனறற்காற்று தனசெயலினினறு நீஙகித தேயநதது, சிவ பெருமான்நெறறிவிழியால சிததசனுகிய மன்மதன்வெநதை யறிநதப்போதே தேவாகளெலலாம இனியென்ன செயவதெ ன்று தஙகள் புததியுமுயிரும வெநதனர், இதனையறிநத இரதி தேவியானவள் எனனுயிாததலைவனே! தலைவனே!! எனறரற்றி இரததினஙகளிழைததஆபரணமானவையாவேதநதததினையா ததமுலைகளினின்றுநீஙக, பொருநதிய புட்பமாலைகள் மெல் லிய கூநதலோடுசோர, கரஙகளிலணிநத வளையல்கள்சிநத கவி ழ்நத பூஙகொததுகளையுடைய வொருகொமபினைப்போல பூமி யில் விழுநதனள், அழகிய கைகளிலேயிருந்த கடகஙகளைக கழற்றிப் பூமிபளளமாமபடி பலதரம் வீசினள, சுருணடு படுத னள், புரண்டனள், வாயவிட்டலறினள, விளககுவாததியினின் றுஞ்சிநதுமநெயபோல கணகளினின்றும நீாததுளிகளைசசிநதி தேகததின்மீதிருநத புழுதியைககழுவினள, பெருமூசசுவிட் டனள், உளம்பதைபதைததது ஒடுஙகிசசோாநதனள, முலைக

கணகளசிவக்கும்படி அடிததுககொணடனள, வயிறுவீஙகும்
படி அழுத்தினள், இரண்டுகைகளையுமடிககடி நெரிததுககொ
ண்டு கூந்தலும், கரஙகளும், கண்ணீரும, பூமியிலதுழாவ
முகமவாடித தவிததிட்டு என்னுருயிரே! யெனகணமணியே!
யெனககோ ரருநதுணையே நினனுடைய ஆதரவாலே உயிரவா
ழுதலன்றி வேறுதுணையில்லாத அடியாளுககு நின்னுருவததி
னைககாட்டாது பகைவரைப்போலவே கைவிட்டனை அவலமா
கிய நிலைமையிலென்னை விட்டுவிட்டு, அனனுய்! அனனுய!! நீ
யெஙகுபோநதனை ஓராயிரஙகணணனுகியதேவேநதிரன மாறு
டலமபெறசசெய்ததும், பிரமன் தானபெறறபெணணின்மீது
இசசைவரசசெய்ததும, விஷ்ணு சுடுகாட்டில் பைத்தியமபிடி
ததலையுமபடி செய்தது முதலாகிய நினது வலிமை சிவபெரு
மானிடததுசசெல்லுமா! அவர்பாலுன்மாயமென்செயும், மெல
லிய பஞ்சணையில நின்னேடு கலவிசெய்து விளையாடுங்காலத
துச சநதோஷமிகுதியினுலே பூஞ்செணடினையெடுத்து நின்
மாா்பின்மீது எறியேனே, புட்பமாலையினையும் நினது மேல்
வீசேனே, அரைஞாணைககொணடும் நினது கரங்களைககட்டே
னே, ஊடலால கோபிததுச் சிணுங்கியகாலத்தும, நீககுவத
றகருமையாகிய நினது இனிமையாகிய மொழியாலேபொருந்
திடுநதூதும வாடி நீஙககககோபிததுக கொடுஞ்சொலலைப் பிர
யோகிததுமறியேனே, எனது கண்களானவைசிவகக உனை
யொருநாளும்பாரேனே, நாமிருவருங கலவிநடத்துங்காலததி
லேயும உநதனுக்கு உள்ளக்குறிப்பிலாதபோது உன்னைககிள்
ளிக்கடித்துப் புடைத்து இருகக நல்லவிளையாட்டுகளையுஞ்செ
ய்ய நினையேனே! அவறறுள்ளுமேதாகிலுங குறையுண்டெ
னின் பொறுத்துககொள்ளாமல் என்னைப்புறத்தேதள்ளி என்
னைவிட்டொளித்துக்கொண்டு தளாகின்றவளாகிய வெனக்கிர

ஙகாதிருப்பதுதகுமோ இதுதகுமோ! கலவிதொழிலிலேயும எனது கலைகளையும அணிகளையும் உமது கைகளால நன்குதிருத்தி எனனுடனகூடி ஒருகணமேனு மென்னைவிட்டுப்பிரிதற்கிசையாத கோமானே! இப்போது சுழன்று பூமியின்மீது கூநதலவிழுநது சிகருண்ண ஆபரணஙகளெலலாமழிய புரணடழும நிலைமையயுடைய அடியாளிடததிரஙகாத நிலைமை உமககு வநததெனனே! என்னே!! இநதப்பிரகாரம இரதிதேவியானவள்மெலிநது உயிர முழுதுமொடுஙகி மேம்பட்ட தனது மெய்சசீர முழுவதுநலிநது இரஙகுகிறபோது நாரதமுனிவரஙகெழுநதருளிய மாததிரததுத துககமென்னுஞ் சேற்றிலழுநதிப் புதையுணடுகிடநத நெஞ்சமானது வலிகொண்டெழமாரனமனைவி யெழுநது வணஙகிநின்று பெருகிய துனபததிலமுழுகிக் கூககுரலிடவு மரங்களெல்லாம் முருகி நீராகியோடலுற்றன, குருகினஙகள் கணணீரவாரநடுஙகின, பசிய புல்லினைக் கறிததுககொணடிருநத வாயினையுடைய மானினமயஙகினின்றன, இஙஙனம் விமமிவிமமி பெருமூசசெறிநது பற்றிப்படாவதறகு ஆகாதரவில்லாத ஓர்கொடியினைப்போலத் தவிதது ஒருதுணைப்பற்றியெழுநது மலரினது மொககையொதது விளஙகுந தனது தனஙகளினமீது கண்ணீர மேகம்போலச சொரியப்பொழிநது நினறனள். இவ்வாறு நின்றவள் முகததைநோககி நிரமபிய கருணையுண்டாக நல்லிசையோடுங்கூடிய வீணையில்வல்ல நாரதமுனிவரானவர், மூங்கிலைநிகர்தத தோளினையும வாசனைகமழுங கூந்தலினையும், சிவந்தவாயினையும், வளப்பமிகுந்த தனங்களையும் வாய்நத இரதியைததேற்றி உரைககவாரம்பிததனர், மதனன்மனைவியே! ஊழ்வினையானது அனுபவித்தாலன்றி யொருக்காலுமொழியாது இஃதுணராமல் வீணே துன்பததால வைவதேயலலாமல் வேறுபிரயோசன

ரிலலே. உனதுநாயகனுக்குப் பிறவிமூன்றுண்டு. பார்வதியா ரைப்பாகத்திறபெற்ற பரமசிவனிடததிலொன்று, துளபமாலை தொஙகப்பெற்ற கண்டததினையுடைய கமலககணணனிடத திலொனறு, விஷ்ணுமூாததியாலவநத விநததேகநதானிப் போது அழியப்பெற்றது, மறறோபிறவியுஞ்சொல்லுகிறேன் கேட்பாயாக, யாதவாகுலத்திலே கண்ணனென்ன வவதாரஞ செயயப்போகும் விஷ்ணுமூாததிககும உருககுமணிதேவிக கும் புததிரனாய்ப்பிறநது பிரதததியுமனனெனனுமபோபெறறு வாழ்வன, நீயும் பிரமனது சாபததால சமபரனென்னு மனையி றபிறநது அவனுககு மனையாய் வாழ்வாய் உனதுநாயகனுக குவநதவினையினது உணமையையும் விரிப்பேன்கேட்பாயாக.

முன்னொருகற்பதத்தில், பரவிய பலவிதமாகிய விரததி னங்களைவாரி நெருஙகியெழுந்து பாய்கின்ற காவிரிதீரததின் வடகரையில் நீர்முகந்து மேகங்கள்தங்கப்பெற்ற வராகவரைச் சாரலில் ஏமபுரமென வோர்நகருண்டு அந்நகரில் நினதுநா யகன் சுநதரனென்னுமோரரசனாய்ப் பெருவலியினாலும், பேரழ கினாலும், எப்பொருளினையு மிரவலருக கில்லையெனனாதுகொ டுப்பதிலும் பெயர்பெற்று விளங்கிககொண்டிருந்தனன். அத் தகையோன் பேரழகினுககமைநத பெருவனப்பினையுடையவ ளாய்ப்பெருங்காதலுடையவளாய, இலலறததிறகுககநத கற் பினையுடையவளாய இரதியெனனும்பெயரைவாய்நத நீமனை வியாயினை, நீஙகளிருவீரும இருதலைப்பட்சியி னொருயிாபோ லப்பொருநதி வாழ்நதுகொண்டிருக்கிற காலததில இளவே னிற்பருவம்வர அககாலத்தில் நினனோடு கலவிததொழிலசெய் யுமபொருட்டு ஓர்சோலைககேக வுன்னினன. காவிரியாற்றின் மணல்பரந்து அழகுமிகுநது உள்ளிடமுழுதும் பூவினின்று

தேன்றுளிசிந்தப் பூநதாதுகள் பிரகாசிக்கப்பெற்ற பூவிதழ்கள்பரவ மாஙகுயிலகளினகுரலுண்டாகுஞ சோலையினேயடாந்நீரகள, அதிக விசையாயவருங காவிரிநதியின் மெலலியமணலசோநதகரையில கையினிடத்துச்சிலைவளேதது அம்புபிடிதது அதிக அனபுகரைந்துருகு காதலியாகிய நின்னுேடுசெல்லுகையில வழியிலெதிரப்பட்ட பட்சிகளின்மீதும் மிருகங்களினமீதுங் கணேகளைவிட வாரம்பிததனன், அஙஙனம விடுகையிலஅவவனததில அரியதவஞ்செய்துகொண்டிருந்த வொருமுனிவா வளாததுககொணடிருககு மிகவழகுடைய மான்கூட்டங்களுள் ஒருஆணமானின்மீதுபட்டிறநதது, அதனின்பெட்டைமானுனது கணடுகலஙகி நெஞ்சுலையவோடித தன்னேவளாககு முனிவாதாளில விழுநது கணணீாசிநத வழுதுமெயகுலைய பெருநதுயரஙகொண்டு நின்றது, அதனேககணடஅப்பெருமுனிவா தானுநதுககஙகொணடு அதன்கண்ணீரைத்துடைததுத தேகததைதத தடவிசசொல்லுவாா, எனது அருமைப்பிளளையைப்போல மிகக வாசையால்வளர்தத மான்களிலொனறைககொன்று மறறொனறு இவ்வாறுஙகெக த துன்பம்புரிநதவன் உடனே சாமபலாய்ப்போககடவன், அவன் இல்லறததினுக்குத துணேவியாகிய அவனமனேவி இப்பெட்டைமானபடட துயரததினேககாட்டிலு மதிகதுன்பததினே யடையககடவளெனறு சபிததனன், இதைககேட்ட சுநதரனெனனுமரசன் மிகததிடுககமுற்று அமமுனிவரை அடைந்து மிகபததியோடு திருவடியினேத தொழுதுப்போற்றி பஞ்சேந்திரியங்களையுஙகெடுதத முனிவரே! நினதுமானெனவறியாது தீங்குசெய்தனன், சிறியனேன மடமையாற்செயத பிழையினேமாற்றி நினதுசரணமடைந்த வெனக்கு நினதுசாபம் பற்ருதிருககும்படித திருவுளம் செய்யவேணடுமென் றிறைஞ்சினன.

